REGISTERED AS A CATHOLIC WEEKLY. (P.197) Founded 19 Feb 1876

# பாதுகாவலன்

இலங்கையின் முதல் தமிழ் கத்தோலிக்க வார ஏடு PATHUKAVALAN

மலர் : 124
இதழ் : 24
30 சித்திரை
விலை ரூபா 5

UNIVERSITY OF ... LIBRARY ... PERIODICALS DIVISION

# இலங்கையில் கண்டெடுக்கப்பட்ட மிகப் பழமையான கிறிஸ்தவ சின்னத்தில்

# இலங்கை கத்தோலிக்க திருச்சபைக்கு

# முதல் தடவையாக கொடி தயாரிப்பு

**பாப்பரசரின் கொடி மதத்தின் கொடியாகவும் அரசின் கொடியாகவும் இருப்பதால் புதிய ஒழுங்கு.**


இலங்கைக்கேயுரிய கத்தோலிக்க கொடியொன்று முதன் முறையாக ஆயர் பேரவைத் தலைவரான பேரருட்திரு ஒஸ்வால்ட் கோமிஸ் அவர்களால் மார்ச் 30ஆம் திகதியன்று ஏற்றி வைக்கப்பட்டது.

மஞ்சள், வெள்ளை நிறங் கொண்ட இக்கொடியின் வெள்ளைப் பகுதியில் புனித தோமையாரின் சிலுவை நீல நிறத்தில் வரையப்பட்டுள்ளது.

இலங்கையின் பல் பாகங்களில் பல கொடிகளும் பதாதைகளும் பயன்படுத்தப்பட்டு வந்தாலும் இலங்கைக்கென ஒரு கத்தோலிக்ககொடி இருக்கவில்லை. பொதுவைபவங்களிளெல்லாம் பாப்பரசரின் கொடியேபயன்படுத்தப்படுவது வழக்கமாயிருந்தது. ஆனால் அது ஒரு மதத்தின் கொடியாக மட்டுமல்லாது ஒரு அரசின் கொடியாகவும் இருப்பதால் அதற்கென சில ஒழுங்குமுறைகள் உண்டு. எனவேதான் இலங்கைத் திருச்சபைக்கென ஒரு கொடி உருவாக்கப்பட்டது.

கொடியின் மஞ்சள், வெள்ளைநிறம் பாப்பரசரின் கொடியில் இருந்து எடுக்கப்பட்டது. அது திருத்தந்தையோடு நாம் கொண்டுள்ள ஐக்கியத்தை உணர்த்துகின்றது. கொடியில் பொறிக்கப்பட்டுள்ள சிலுவை வரலாற்று முக்கியத்தும் வாய்ந்தது. இது 1912இல் அனுராதபுரத்தில் கண்டெடுக்கப்பட்ட ஒரு தூணில் பொறிக்கப்பட்டிருந்த சிலுவையின் வடிவமாகும். ஒரு பீடத்தின் மீது காணப்படும் இச்சிலுவை நான்கு அந்தங்களிலும் மலர் வடிவம் கொண்டது. பீடத்திலிருந்து இருபுறமும் இரு இலை வடிவங்கள் அமைக்கப்பட்டுள்ளன.

அனுராதபுரத்தில் கண்டெடுக்கப்பட்ட சிலுவை போர்த்துக்கேயர் காலத்துக்கு முற்பட்டது எனக் கருதப்படுகிறது. இது போன்ற வேறு சிலுவைகளும் இலங்கையில் கண்டெடுக்கப்பட்டுள்ளன. இச் சிலுவையின் வடிவம்புனித தோமையர் காலத்தில் மனந்திரும்பிய கிறிஸ்தவர்கள் பயன்படுத்திய "பாரசீக சிலுவை" வடிவத்தை ஒத்துள்ளது. இதுவே இலங்கையில் கண்டெடுக்கப்பட்டுள்ள மிகப் பழமையான கிறிஸ்தவ சின்னமாகும்.



கத்தோலிக்க கொடி

இச்சிலுவை நீல நிறத்தில் வரையப்பட்டுள்ளது இலங்கை மக்கள் தேவதாயின் மீது கொண்டுள்ள விசேட பக்தியை, தேவதாய் எம்மீது கொண்டுள்ள விசேட அன்பைக் குறிக்கின்றது.

கொடியின் அமைப்பு எளிமையானது. இலகுவில் செய்து கொள்ளக்கூடியதாகவும், உருத்திரிவுகள், மாற்றங்களுக் இடமளிக்காதவாறும் அமைக்கப்பட்டுள்ளது.

(கிறிஸ்தவர்கள் சிலுவையில் அறையப்பட்டனர்)

# ஆசியாவில் கத்தோலிக்கரைப் பெரும்பான்மையாகக் கொண்ட பிலிப்பைன்ஸில் நிகழ்ந்த சம்பவம்

## 5 ஆயிரத்திற்கு அதிக மக்கள் இக்காட்சியைக் கண்டனர்

பிலிப்பைன்ஸ் நாட்டிலுள்ள கட்டட் என்ற கிராமத்தில் 11 கிறிஸ்தவர்கள் பெரிய வெள்ளியன்று தம்மை மரச்சிலுவைகளில் அறைந்தனர். இது போன்ற மதச்சடங்கு ஆண்டு தோறும் இக்கிராமத்தில் நடந்து வருவதாகத் தெரிகிறது. ஆனால் இது பிலிப்பைன் கத்தோலிக்க திருச்சபையின் ஒப்புதல் பெற்ற சடங்கல்ல. இது அவர்களின் நேர்த்திச் சடங்காகும்.

ஆணி அடிக்கும்போது சிதறும் இரத்தம் தம்மீது படுவதை அம் மக்கள் புனிதமாகக் கருதுகின்றனர். இம்முறை ஐயாயிரத்துக்கும் மேற்பட்ட மக்கள் இக் காட்சியைக் காண அங்கு கூடியிருந்தனர்.

## இலங்கையில் அமைதிக்கு உதவ வெளிநாடுகள் விருப்பம்.

இலங்கையில் அமைதியைக் கொண்டுவரும் முயற்சிகளில் உதவுவதற்கு பல வெளிநாடுகள் தயாராயிருப்பதாக மன்னார் ஆயர் பேரருட்திரு இரா. ஜோசவ் அவர்கள் ஆங்கிலப் பத்திரிகை ஒன்றுக்குத் தெரிவித்தார்.

இரத்தினபுரி ஆயர் மல்கம் ரஞ்சித் அவர்களுடன் ஐரோப்பிய நாடுகளுக்கு அண்மையில் சென்றுவந்த அவர் அங்குள்ள பல நாடுகள் இலங்கையில் சமாதானம் ஏற்படுவதில் ஆர்வம் காட்டுவதாகக் கூறினார்.

மக்கள் மத்தியில் விழிப்புணர்வை ஏற்படுத்தும் பொருட்டு தாம் தற்போது ஒரு நிகழ்ச்சிக்குத் திட்டம் தயாரித்து வருவதாகவும் அவர் தெரிவித்தார்.

### மரியாயின் சேனைத் தாபகர் பிராங் பிராங்டல் அவர்களை நேரில் சந்தித்த திரு ஜோசவ் பிலேந்திரனின் வழிகாட்டலில்

# 200 அங்கத்தவர் கூடிய

# மரியாயின் சேனை மாநாடு

யாழ் குடாநாட்டில் உள்ள மரியாயின் சேனை அங்கத்தினர்க்காக யாழ். கொமிற்சியத்தினால் ஏற்பாடு செய்யப்பட்ட சேனை மகாநாடு ஏப்ரல் 8ஆம் திகதி யாழ்.மறைக்கல்வி நிலையத்தில் நடைபெற்றது

பதட்டமான சூழ்நிலையிலும் சுமார் 200 அங்கத்தவர்கள் சமூகமளித்திருந்தனர். இந்த ஒரு நாள் மாநாட்டின் காலை அமர்வின் போது "கிறிஸ்துவின் மறையுடல்" என்னும் கருத்து ஆய்வுக்கு எடுத்தக்கொள்ளப்பட்டது. இதற்கு அடிப்படையாக யோவான் நற்செய்தியில் இருந்து திராட்சைக் கொடியின் உவமை, திருத்தூதர் பணியிலிருந்து சவுலின் மனம் திரும்புதல் என்னும் பகுதிகள் எடுத்துக் கொள்ளப்பட்டன. உரையைத் தொடர்ந்து குழுஆய்வு இடம்பெற்றது. பிற்பகல் அமர்வில் "திருச்சபையில் மரியாயின் தாய்மை" என்னும் விடயம், சேனைக் கைப்புத்தகம், நற்செய்திகள், திருச்சபையின் ஏடுகள் ஆகியவற்றின் அடிப்படையில் ஆராயப்பட்டது

இம்மகாநாட்டை நெறிப்படுத்தியவர் அண்மையில் இங்கிலாந்தில் இருந்து இலங்கை வந்திருக்கும் திரு ஜோசவ் பிலேந்திரன் ஆவார். 60வருட சேவைமிக்க இப் பெரியார் இங்கிலாந்தில் செனாத்துஸ் அலுவலராகவும் ஆபிரிக்காவில் சேனைத் தூதுவராகவும் பணியாற்றியதோடு மரியாயின் சேனைத் தாபகர் பிராங்க் டவ் அவர்களை நேரில் அறிந்தவராவார். அவர் பகிர்ந்து கொண்ட அறிவும் அனுபவமும் சேனையாருக்கு வாழ்விலும் பணியிலும் பயன்தரத்தக்கதாக அமைந்தன.

## ஆயருக்கு சமாதான விருது

கொழும்பு ரீட் அவனியு விளையாட்டரங்கில், தேசிய நல்லிணக்க நீதி அரசியலமைப்பு பிரதியமைச்சர் டிலான் பெரேரா தலைமையில் நடைபெற்ற போது போரினால் பாதிப்புறும் மக்களுக்காக மனிதாபிமான ரீதியில் குரல்கொடுத்துவரும் மன்னார் ஆயர் பேரருட்திரு இரா.ஜோசவ் அவர்களுக்கு சமாதானத்துக்கான விருது வழங்கப்பட்டது.

## சங்கானையில் புதிய ஆலயம்

சங்கானையில் புதிதாகக் கட்டப்பட்ட புனித பிரான்ஸிஸ் சவேரியார் ஆலயம் மாசி 26 ஆம் திகதி யாழ். ஆயர் பேரருட்திரு தோமஸ் சவுந்தரநாயகம் அவர்களால் திறந்துவைக்கப்பட்டது.

சங்கானையில் முதன் முதலாக ஒரு கத்தோலிக்க ஆலயம் 1878ஆம் ஆண்டில் அமைக்கப்பட்டது. 1895இல் அது ஒரு நிரந்தர கட்டடமாக உருப்பெற்றது.

இன்றைய மக்களின் தேவைகளைப் பூர்த்தி செய்ய, சமகால கலாசார அம்சங்களைக் கொண்ட ஓர் ஆலயத்தைக் கட்டியெழுப்புவது அவசியமென உணர்ந்த சங்கானை மக்கள் தொகையிற் குறைந்தவராக இருந்தபோதிலும் ஒற்றுமை உணர்வோடு இப்பணியினை மேற்கொள்ள முன்வந்ததால், வெளிநாட்டில் வாழும் பங்குமக்களின் உதவியோடும் ஆலயச் சூழலில் வாழும் இந்து மக்களின் அன்பளிப்புக்களோடும் தமது பங்களிப்புகளையும் திரட்டி, இவ்வாலய பங்குத்தந்தை அருள்திரு அ.அன்ரன் றொக் அவர்களின் அயரா முயற்சியுடன் ஓராண்டு காலத்தில் கட்டிமுடிக்க இயலுமாயிருந்தது.

2000 யூபிலி ஆண்டில் திறக்கப்பட்ட இவ்வாலயம் சங்கானைத் திருச்சபையில் அருள்சுரக்கும் ஊற்றின் அடையாளமாகத் திகழ்கின்றது.

## சில்லாலைப் பங்கின் 32ஆவது குருமணியின் முதல் திருப்பலி

இறையருளால் பணிக்குருத்துவத்திற்கு திருநிலைப்படுத்தப்பட்டுள்ள ஜஸ்ரின் சௌகான் தி.ந.ச. அடிகளார் சில்லாலைப்பங்கின் 32ஆவது குருமணி ஆவார்.

இவர் 30-04-2000ஆம் ஞாயிற்றுக்கிழமை காலை 10 மணிக்கு தமது முதல் திருப்பலியை சில்லாலை புனித கதிரை மாதா ஆலயத்தில் ஒப்புக்கொடுப்பார்.

திருமதி மேரி ஜேசப்பின் அவர்களின் புதல்வரும் யாழ் மறைமாவட்டக் குருவான அருள்திரு போல் றொகான், திருக்குடும்ப கன்னியர் சபையைச் சேர்ந்த அருட்செல்வி விஜயா ஆகியோரின் சகோதரருமாவார்.

மேற்படி திருப்பலியில் பங்குபற்றி இறைவனுக்கு நன்றி கூறுவதுடன் சில்லாலையில் தேவ அழைத்தல்கள் மேலும் பெருகும்படி செபிக்குமாறு பங்குத்தந்தை அருள்திரு றெஜி இராஜேஸ்வரன் அனைவரையும் அழைத்துள்ளார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## எம் கருத்து

### சமாதானப் பேச்சுக்களுக்கு அடிப்படையாக அமையட்டும்

நோர்வே நாட்டின் மூன்றாம் தரப்பு மத்தியஸ்தத்துடன் பேச்சுவார்த்தைகளை புலிகள் வரவேற்றபின், பிற நாடுகளின் மத்தியஸ்தத்தை ஏற்காத இலங்கை அரசு தன் நிலைப்பாட்டிலிருந்து இறங்கியவுடன், மக்கள் மனதுகளில் புதிய நம்பிக்கை துளிர்விட்டது.

ஆனால் ஜனாதிபதித் தேர்தல் முடிந்து நான்கு மாதங்களான நிலையில், அரசு இந்நிலையினை பொதுத் தேர்தலில் பெரு வெற்றிக்கான ஒரு யுக்தியாக கொண்டு காலம் தாழ்த்தியே வந்துள்ளது.

யாழ் நகரின் ஆனையிறவில் விழுந்த பலமான அடி அரசை நிலைகுலைய வைத்துள்ளது. களநிலவரம் பற்றி அரசு விடுக்கும் முன்னுக்குப் பின் முரணான தகவல்களும் இது ஒரு இராணுவ யுக்தி என்ற குத்துக்கரணங்களும் இதனையே வெளிக்காட்டுகின்றன.

யாழ்ப்பாணத்தின் மிக முக்கிய தளமான ஆனையிறவை இழந்தபின் யாழ்ப்பாணத்தை தக்க வைக்க முடியுமா? என்ற எதிர்க்கட்சித் தலைவருடைய உரத்த கேள்வியும் அரசியல் ஆய்வாளர்கள், விமர்சகர்களின் ஆய்வும் அரசை உடன் செயற்பட வைக்கும் என்றே எண்ணுகிறோம்.

சமாதான முயற்சிகளை நேரகாலத்தோடு மேற்கொள்ளாமையினால் கிடைத்த இந்தப் பலமான அடியின் பின்னர் பேச்சுவார்த்தையை ஆரம்பிப்பது அகௌரவம் எனக் கருதாமல் 'உடனடியாக சமாதான முயற்சிகளை ஆரம்பிப்பது ஜனநாயக அரசின் கடனாகும்.

ஆனையிறவு ஒரு தோல்வியல்ல என்ற அரசின் நிலையும், அது ஒரு உறுதியான வெற்றி என்ற புலிகளின் நிலையும் ஆனையிறவை தாம் தோற்கவில்லையென இருவரும் காரணம் காட்டுவதாகவே அமைகின்றது. ஆனையிறவின் வெற்றியோ தோல்வியோ, அது சமாதானப் பேச்சுக்களுக்கான ஒரு அடிப்படையாக அமையாவிட்டால், அது ஒரு பெரும் தோல்வியே என்பதை இரு தரப்பினரும் தமிழ் மக்களின் எதிர்காலத்தை கருத்திற் கொண்டு ஏற்றுக்கொள்ள வேண்டுமென்றே விரும்புகின்றோம்.

இலங்கை வரலாற்றில் என்றுமில்லாதவாறு எதிர்கட்சியினரும் சமாதான முயற்சிகளுக்கு ஆதரவு தெரிவித்திருப்பது நம்பிக்கையூட்டுகின்ற வேளையில் துணைக்கரம் நீட்டிய நாட்டினது தேசியக் கொடியினை எரித்து அவப்பெயர் வாங்குகின்ற மதத் தீவிரவாதிகளும், சமாதானம் வேண்டாம் என்று குரலெழுப்புகின்ற இனத் தீவிரவாதிகளும் தம் தீவிர போக்கை விட்டு மனம் மாறுவார்கள் என்றே எதிர்பார்க்கிறோம்.

இரண்டாவது தடவையாக பதவியேற்றிருக்கும் ஜனாதிபதியைவிட இப்பிரச்சனையையும் அதன் தாக்கங்கள், விளைவுகள், குழப்பங்கள் அனைத்தையும் நன்கறிந்த வேறு எவரும் இருக்க முடியாது. அரசியல் ஞானத்துடனும் தூரநோக்குடனும் இதய சுத்தியுடனும் இனப் பிரச்சனைக்கான தீர்வினைக் காண ஜனாதிபதி முயல்வாரானால் இலங்கையின் சரித்திர ஏடுகளில் சிறந்த தலைவர்கள் வரிசையில் இவர் இடம்பெற முடியும்.

# இறைபுணிக்களத்தில் குதிப்பதற்கு இளைஞனே நீ ஆயத்தமா?

## தேவஅழைத்தல் சிறப்பு தினக் கட்டுரை

**தேவஅழைத்தல் இயக்குனர் A.லோறன்ஸ் அடிகள்**

பூவுலகு மைந்தரைத் தூய வழி நடத்திச் செல்ல இறைமகன் இயேசு உன்னை இரு கரம் நீட்டி அழைக்கின்றார். மதிக்கப்படும் மாண்புடைய மனிதரெல்லாம், மண்ணாக மிதிக்கப்படும் காலமிது. பாவ இருள் கவிந்த காலத்தில் மாந்தரின் பாவச்சுமை தீர்க்கப் பாருலகில் அவதரித்த இறைமகன் போன்று மனித குலத்தைச் சூழ்ந்துள்ள துன்ப துயர்களைத் துணிவுடன் எடுத்தெறிய இளைஞனே புறப்படு.

இன்றைய நவீன உலகில் மனம் மயங்கி வாழப் புறப்பட்டு, உயர் ஆன்மீகப் பாதையை உதறிவிட்டவராகத் தீமை மேல் நாட்டங்கொண்டுதுன்பங்களுக்கு மேல் துன்பங்களைச் சுமப்பவர்கள் பலர். தவறிய மந்தைகளாக,ஆண்டவனின்அணைப்பை வ்ழிப்படுத்தவும், ஒழிப்படுத்தவும், நல்ல அருளுள்ள ஆயர்கள் பலர் வேண்டும். அன்றியும் இறைசாயலாகப் படைக்கப்பட்ட மானிடமகன் ஒவ்வொருவனையும் இறையரசிற்கு இட்டுச்செல்லும் பாரிய பொறுப்பு எம் அனைவருக்கும் உரியது. எனவே இயேசுவின் திருப்பணியில் குருத்துவத்தின் விசேட அழைப்பைப் பெற்று, பரந்த அளவில், யாழ். மறைமாவட்டத்திற் பணியாற்ற, உன் உடன் பிறப்புக்களின் இன்பத்திலும், துன்பத்திலும் பங்கெடுக்க முழு மனத்தோடு விரும்புகின்றாயா? தாமதியாதே, காலங்கள் நேரங்கள் உனக்காக காத்திருக்க மாட்டா. அன்று, வயலிற் புதையல் கண்டவன் தன் வசமிருந்த உடைமைகள், சொத்துக்கள் அனைத்தையும் விற்று அப்புதையலைத் தனதாக்கிக் கொண்டான். அதுபோல் ஆண்டவனின் அழைப்பு என்ற புதையல் உனக்குக் கிடைக்குமானால், அதை உனதாக்கிக் கொள்ள உன் அறிவு, ஆற்றல், அனைத்தையும் ஒருமித்து அர்ப்பணித்து, இறைபணிக் களத்திற் குதிப்பதற்கு இளைஞனே நீ ஏன் முன் வரக்கூடாது?

பெற்றோரே, பெரியோரே எதிர்காலத் திருச்சபையின் தூண்கள் உங்கள் குடும்பங்கள். உங்கள் குடும்பங்களில் இருந்து தேவ அழைத்தல் என்ற திருமலர் உதயமாகி நறுமணம் பரப்ப, குடும்பங்களில் உங்கள் பிள்ளைகளின் உள்ளங்களில், விதைகளைத் தெளித்துவிட்டீர்களா? 2000ஆம் ஆண்டிற் காலடி எடுத்துவைத்துள்ள நீங்கள் அழைத்தலின் மேன்மையை அறிந்திருப்பீர்கள். ஆகவே அவர்களுக்கு அறிவுரை கூறுங்கள். ஆண்டவனால் அழைக்கப்பட்டு, உங்கள் உதவியை, வழிகாட்டுதலைத் தேடி ஓடிவர அவர்களுக்கு அன்று சாமுவேலை நெறிப்படுத்திய ஏலியைப் போல் உதவி புரியுங்கள். பங்குத் தந்தையர்களே! நீங்கள் பங்குத் தலங்களிலே படுகின்ற துன்பங்களை, நீங்களும் உங்கள் தலைவனுமாகிய கிறிஸ்து ஒருவர் மாத்திரம் அறிவார். உங்கள் பணிகள் பகிரப்படல் வேண்டும். உங்கள் வேதனைகள் தணிக்கப்படல் வேண்டும் என்பதை நீங்கள் நன்கு அறிவீர்கள். எனவே எதிர்காலத் திருச்சபையின் எதிர்பார்ப்புக்களைக் கருதியும், உங்களோடு பணியாற்ற உடன் பணியாளர்கள் பலர் வேண்டும் என்பதை மனத்திற் கொண்டும், இளைஞர்களின் ஆர்வத்தை இனம் கண்டு, அவர்களை நெறிப்படுத்துங்கள், வழிப்படுத்துங்கள், உற்சாகப்படுத்துங்கள். இளந் தலைமுறையினர் நெஞ்சில் அறச் சிந்தனைகள் மலரச்செய்யுங்கள். இறையரசானது இறைவன் விரும்புவது போல் எங்கும் விரிந்து பரவ, உங்கள் உழைப்பையும் இறைவன் ஆசீர்வதிப்பார்.

இளைஞனே நிலத்திலே புதைக்கப்படும் வாழ்வை நிலவிலே புதைக்கச் சிந்தனை செய்; இன்று போர்தொடர்கதையாக மக்களிடையே ஆறாத தழும்புகளாக, சொல்லொண்ணாத் துயரங்களாகப் பெருகிக் கொண்டு இருக்கின்றன. அன்று ஆண்டவன், வேதனையால் வெந்தவர்களை, சோதனையால் நொந்தவர்களைத் தேடி அலைந்தார். ஒதுக்கப்பட்டுப் புறக்கணிக்கப்பட்டு, வெறுக்கப்பட்டவராய், நினைவுகளாற், சுமக்க முடியாத சோகத்தில் நீந்தியவர்களுக்கு ஆறுதலும் தேறுதலும் அள்ளி வழங்கினார். ஆயுள் முடிந்தாலும் அழுகை முடியாத நோய்களால், அல்லற்பட்டோருக்கு ஆனந்தச் சுடர் பொழிந்தார். அந்த ஆண்டவனின் பாதச் சுவட்டைப் பின்பற்றி உன்னத வாழ்வின் வழியைக் காட்ட. வேதனையால் வாடுபவர்களைத் தேற்ற, ஆண்டவன் அருளை அனைவருக்கும் அர்ப்பணிக்கும் கருவியாகப் பயன்பட ஆண்டவர் உன்னையும் அழைப்பதாக உணர்கின்றாயா? பணம், பட்டம், . பதவி, புகழ் என்னும் மனித சராசரி ஆசைகளின் மயக்கத்திலிரு ந்து வெளியேறிப் புனித சேவையின் தியாகத்தில் உன் வாழ்வைப் புடமிடத் துடிக்கின்றாயா?

புறப்படு! தாமதியாதே. இந்த விடுதலையின் யூபிலி ஆண்டிலே நீ இறை அருளாற் கட்டப்பட்டு, பலவித துயர்களாற் கட்டுப்பட்டவர்களின் சிறை மீட்கப் புறப்படு "என் கடன் பணி செய்து வாழ்வதே", "உன் பணிக்கு நான் இதோ", "உன் பாதம் எங்கோ, என் பாதம் அங்கே", என் ஆண்டவரின் பலத்தோடு, பாசத்தோடு புறப்படு", "ஆண்டவரில் மகிழ்ச்சி கொள், உன் உள்ளத்து விருப்பங்களை அவர் நிறைவேற்றுவார்" (திருப்பாடல் 37:4) என்ற சங்கீத ஆசிரியரின் செபத்தோடு, ஆண்டவரின் துணையை எண்ணிப், புறப்படு! இறைபணிக் களத்தை நோக்கி.

''துறவற வாழ்வு வாழ்க்கையின் தூமணிக் கவசம்''

# தொழிலாளரின் பாதுகாவலர்

கத்தோலிக்க திருச்சபையின் அதிசிறந்த புனிதராகக் கொண்டாடப்படுபவர் புனித சூசையப்பர். திருக்குடும்பத்தின் தலைவரான அவர் தச்சனாகத் தொழில்புரிந்து தமது குடும்பத்தைப் பராமரித்தபடியினால் தொழிலாளரின் பாதுகாவலராகவும் முன்மாதிரியாகவும் திருச்சபையால் தரப்பட்டுள்ளார்.

புனித சூசையப்பர் இயேசுவின் வளர்ப்புத் தந்தையாக இருந்தபோதிலும் அவரைப் பற்றிய விவரங்கள் விவிலியத்தில் மிகக்குறைவாகவே தரப்பட்டுள்ளன. அவரது வாழ்க்கையைப் பற்றிய விவரங்கள் எல்லாம் மிகச் சுருக்கமாக உள்ளன.

ஆனால் புனித சூசையப்பர் பற்றிய வரலாறுகள் மரபு வழியாக கத்ததோலிக்க திருச்சபையில் வழங்கிவருகின்றன. இவை விசுவாச உண்மைகள் என்று சொல்ல முடியாவிட்டாலும் புனித சூசையப்பர் மீது பக்தியை வளர்க்க இவை பெரிதும் உதவியுள்ளன. மரபு வழியாக வந்த விவரங்களுட் சில:

1. அவருக்குத் திருமணம் நிகழ்ந்த விதம்

2. அவர் வயது முதிர்ந்தவராய் சித்தரிக்கப்படுவது

3. அவர் இறப்புப் பற்றிய கதைகள்

விவிலியம் அவரைப்பற்றி ஒன்றுமட்டும் தெளிவாகக் கூறுகின்றது. அதாவது அவர் ஒரு நீதிமானாக இருந்தார். இந்த அடைமொழி விவிலியத்தில் மிகவும் சிறப்புவாய்ந்தது. வெகு சிலருக்கே கொடுக்கப்பட்டுள்ளது. இயேசுவைப் பிலாத்து கூட "நீதிமான்" என்று அழைக்கிறான். "நீதிமான்" எனும் வார்த்தை விவிலியப் பின்னணியில் "கடவுளுக்கு உகந்தவர்", "கடவுளின் திருவுளத்தை நிறைவேற்றுபவர்" எனப் பொருள்படும். புனித சூசையப்பரின் வாழ்வில் இந்தப் பண்பை சிறப்பாக காணமுடிகிறது.

உதாரணமாக சக்கரியாஸ் சூசை இருவருக்குமே இறைவனின் செய்தி கிடைக்கிறது. பெரிய குருவாகிய சக்கரியாஸ் தூப்பீடத்தின் அருகில் நேரில் தோன்றி வானதூதன் கூறிய செய்தியை நம்பமுடியாது கேள்வி கேட்கிறார். ஆனால் சூசை ஒரு தச்சர், ஒரு சாதாரண மனிதன் - ஆயினும் கனவில் வானதூதரால் அவருக்குக் கொடுக்கப்பட்ட கட்டளையை சிரமேற்கொண்டார். இறைவனின் திருவுளத்தை முழுமையாக தயக்கமின்றி ஏற்றார். இந்த விசுவாசமே அவரை நீதிமானாக உயர்த்தியது. இறைத் திட்டத்தை நிறைவேற்றுவதில் ஒரு முக்கிய கருவியாக விளங்குகின்றார். சாதாரண வாழ்வு வாழும் மக்கள் புனிதத்துவத்தை அடைய சூசையப்பரின் வாழ்வு ஒரு வழிகாட்டியாக இருக்கின்றது.

தொழிலாளரின் பாதுகாவலராக அவர் தேர்ந்து கொள்ளப்பட்டதற்குக் காரணம் அவரும் ஒரு தொழிலாளி என்பது மட்டுமல்ல, தமது தொழிலின் மகத்துவத்தை உணர்ந்து இறைசித்தத்தை நிறைவேற்றுவதற்கு அதை ஒரு வழியாக அவர் எடுத்துக்கொண்டாதுமாகும்.

தொழிலாளருக்கு மட்டுமல்லாது, புனித சூசையப்பர் திருச்சபைக்கு, நற்படிப்புக்கு, இளமங்கையருக்கு, நல்மரணத்துக்கு, பாதுகாவலராக விளங்குகின்றார். மனித அவதாரமெடுத்த இயேசுவுககு பாத்துகாவலராக இருந்த அவரை கிறிஸ்துவின் மறையுடலான திருச்சபைக்கு பாதுகாவலராகக் கொள்வதும், இளம் கன்னியான மரியாளுக்கு அவர் பாதுகாப்பாக இருந்ததுபோல கன்னியரின் கற்புக்கு அவரைப் பாதுகாவலராகக் கொள்வதும் பொருத்தமானதே.

நேர்மையாகத் தொழில்புரியும் உத்தம தொழிலாளியாக மனைவி, மக்கள் மீது அன்பும் கரிசனையுமுள்ள பொறுப்புள்ள குடும்பத்தலைவனாக, சமூகத்தில் ஒரு நல்ல குடிமகனாக, சமயக்கடமைகளைப் பிரமாணிக்கமாக நிறைவேற்றும் ஒரு யூதனாக, எல்லவாற்றுக்கும் மேலாக இறைவனின் திருவுளத்தை நாடும் ஒரு நீதிமானாக வாழ்ந்த சூசையப்பர் அனைவருக்கும் ஓர் எடுத்துக்காட்டாவார்.

இன்றைய சூழ்நிலையில் சூசையப்பரைப் போன்ற நீதிமான்கள் நிறையத்தேவை. அநீதிகள் மலிந்த இந்நாட்களில் ஒரு நீதியான சமுதாயத்தைக் கட்டி எழுப்ப சூசையப்பரைப் போன்ற நீதிமான்கள் புலர் எம் மத்தியில் உருவாக வேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# கிறிஸ்தவ உலகில் நடப்பவை சில...

தொகுப்பு : ஆ. அஜந்

## ஸ்பானிய வேதசாட்சிகளுக்கு புனிதர் பட்டம்

திருத்தந்தை 2ஆம் அருளப்பர் சின்னப்பர் நவம்பர் 21ஆம் திகதியன்று 12பேருக்கு இராயப்பர் தேவாலயத்தில் புனிதர் பட்டம் அளித்தார். இவர்களில் 10பேர் ஸ்பானிய உள்நாட்டுப் போரில் கொல்லப்பட்ட வேதசாட்சிகளாவர். இவர்களில் ஒருவர் திருப்பாடுகளின் சபையைச் சேர்ந்த பிதா இனொசென்சியோ டிலா இமாக்குலாடா. ஏனையோர் கல்வி பயிற்றும் கிறிஸ்தவ அருட்சகோதரர்கள். இவர்கள் 1934ஆம் ஆண்டில் கொல்லப்பட்டனர். மற்றொரு வேதசாட்சி 1937இல் கொல்லப்பட்ட ஜாவுமே பிலாரி என்பவர்.

மற்ற இரு புனிதர்களும் இத் தாலிய துறவிகள். ஒருவர் பிரான்ஸிஸ்கன் சபையைச் சேர்ந்த தொமாஸோடா கோரி (1655-1729) மற்றவர் ஆண்டவரின் புனித யோவான் சபையைச் சேர்ந்த பெனிற்றோமென்னி (1841-1914).

ஸ்பானிய வேதசாட்சிகளுக்குப் புனிதர் பட்டம் அளித்ததில் எந்த அரசியல் உட்கருத்தும் இல்லை என்பதை திருத்தந்தை வலியுறுத்தினார். "அவர்கள் போராளிகள் அல்ல. இளைஞர்களுக்குக் கல்வி போதித்தவர்கள். தமது மரணத்தில் விசுவாசத்துக்குச் சான்று பகர்ந்து தமது வாழ்வின் கடைசிப் பாடத்தைப் போதித்தனர்." என்று அவர் கூறினார்.

## நன்மையானவற்றிற்கு முக்கியத்துவம் அளியுங்கள்

உலகில் நிகழும் நன்மையானவற்றைப் பொருட்படுத்தாமல் விடுவதன் மூலம் பத்திரிகையாளர்கள் உண்மையைத் திரித்துக்கூறக்கூடும் என திருத்தந்தை கத்தோலிக்க பத்திரிகையாளருக்கு அளித்த ஒரு செய்தியில் கூறுகின்றார்.

நிகழ்ச்சிகளைச் சரிவரக் கூறுவது, மட்டும் உண்மையாகாது என்று கூறிய அவர் "இன்றைய சமுதாயத்தில் அநேக இடங்களில் நன்மையில் நாட்டமுள்ளது. ஆனால் இந்த நன்மைத்தனம் பத்திரிகைகளிலோ, வானொலி, தொலைக்காட்சிச் செய்திகளிலோ காட்டப்படுவதில்லை. உலக நிகழ்ச்சிகளை மக்கள் சரிவர விளங்கிக் கொள்வதற்கு துணைபுரிவதை விட பரபரப்பூட்டும் செய்திகளுக்குத்தான் முக்கியத்துவம் அளிக்கப்படுகிறது.

எதிர்மறையான காரியங்களுக்கு அளவுமீறிய முக்கியத்துவம் அளிக்காது நேர்மை, சமாதானம், வாழ்வு, குடும்பம் போன்ற கருத்துக்களுக்கு அழுத்தம் கொடுப்பது ஒரு புதிய மனிதப்பண்பு வளர்வதற்குத் துணைபுரியும்"

இன்றைய நவீன தொடர்பு சாதனங்களின் மூலம் பெருந்தொகையானோருக்கு செய்திகள் பரப்பப்படுவதால் இவற்றை எவ்வாறு கையாள வேண்டுமென்று மக்களுக்கு விளக்கப்படவேண்டும். அரசுகளும், தொடர்புசாதனங்களும், பெற்றோரும், பாடசாலைகளும் இதற்குத் துணைபுரிய வேண்டும் என்றும் அவர் தெரிவித்தார்.

### 23ஆம் அருளப்பருக்கு புனிதர் பட்டம்

யூபிலி ஆண்டு செப்டெம்பர் 3ஆம் திகதி திருத்தந்தை 23ஆம் அருளப்பருக்கு புனிதர் பட்டம் அளிக்கப்படுமெனத் தெரியவருகிறது. அதேவேளையில் திருத்தந்தை 9ஆம் பத்திநாதர், அருட்சகோதரி பௌஸ்தீனா ஆகியோருக்கும் புனிதர் பட்டம் வழங்கப்படும். அத்துடன் ஸ்பானிய உள்நாட்டுப் போரில் வேதசாட்சிகளாக மரித்த 100 பேருக்கு முத்திப்பேறு பெற்ற பட்டம் அளிக்கப்படும்.

## சமாதானம் ஏற்பட யூபிலியைப் பயன்படுத்துக!

ருவாண்டா புருண்டியில் போரினால் காயமுற்று இருக்கும் மக்களுக்கிடையில் சமாதானத்தை ஏற்படுத்த 2000 ஆம் ஆண்டைப் பயன்படுத்துமாறு திருத்தந்தை அந்நாட்டுத் தலைவர்களைக் கேட்டுள்ளார்.

தடைப்பட்டிருக்கும் சமாதானப் பேச்சுவார்த்தைகளை முன்னெடுப்பதற்கு தென்னாபிரிக்கத் தலைவர் நெல்சன் மண்டேலா மத்தியஸ்தராக நியமிக்கப் பட்டுள்ளமையையிட்டு திருத்தந்தை நம்பிக்கை தெரிவித்தார்.

"கண்மூடித்தனமான வன்முறையில் எண்ணற்ற மக்கள் பலியாகியுள்ளனர். இதற்குக் காரணமானவர்கள் இறைவனின் தீர்ப்புக்கு ஆளாவர். கேள்வி முறையற்ற மரண தண்டனைகளும் கொலைகளும் வன்முறைகளும் மனித உயிரின் மாண்பை அழிக்கின்றன. இது மனிதனை விகாரப்படுத்தி சமுதாயத்தின் எதிர்காலத்தைப் பாதிக்கிறது." என்று அவர் கூறியுள்ளார்.

## சீனக் கத்தோலிக்கரின் வாழ்த்து

திருத்தந்தை 2ஆம் அருள் சின்னப்பர் பாப்பரசராகிய 21 ஆம் ஆண்டு நிறைவையொட்டி சீனக் கத்தோலிக்கர் அனுப்பிய வாழ்த்துச் செய்தியில் அவர் மட்டில் தாம் கொண்டுள்ள பிரமாணிக்கத்தையும் வெளிப்படுத்தியுள்ளனர். ஷாங்காய் ஆயர் ஜோசவ் வான் சொண்லியாங் அனுப்பிய இக்கடிதத்தில் பல குருக்களும் விசுவாசிகளும் கையெழுத்திட்டுள்ளனர்.

திருத்தந்தைக்குப் பிரமாணிக்கமான இந்தக் கத்தோலிக்க திருச்சபை சீன அரசின் அங்கீகாரம் பெறாததாகும்.

## பத்திரிகையாளருக்கு திருத்தந்தை அழைப்பு

"புனித மிலேனியத்தின் விடியலில் கிறிஸ்துவை அறிவியுங்கள்" என்பதே திருத்தந்தை 2ஆம் அருள்சின்னப்பர் உலக தொடர்பு சாதனங்கள் தினம் (2000) தொடர்பாக எடுத்துள்ள கருத்தாகும். தூய ஆவியின் திருநாளுக்கு முந்திய ஞாயிறாகிய ஜூன் 4ஆம் திகதி இத்தினம் உலகெங்கும் கொண்டாடப்படும். யூபிலி ஆண்டு நிகழ்ச்சிகளுள் இதுவும் அடங்கும்.

அன்றைய தினம் புனித இராயப்பர் சதுக்கத்தில் குழுமியுள்ள பத்திரிகையாளருக்காக திருத்தந்தை திருப்பலி ஒப்புக்கொடுப்பார். தொடர்பு சாதன தினச்செய்தி ஜனவரி 24ஆம் திகதி பத்திரிகையாளரின் பாதுகாவலரான புனித சேல்ஸ் பிரான்ஸிஸ் திருநாளன்று வெளியிடப்படும்.

## விவிலியம் பிரயாணிகளின் வழிகாட்டி

டப்ளின் நகரப் பேராயர் டெஸ்மண்ட் கொனெல் விவிலியத்தை நன்கு விலைப்படும் பிரயாணிகளின் வழிகாட்டி நூலுக்கு ஒப்பிட்டு இளைஞர் அதை பயன்படுத்த வேண்டுமென்று வற்புறுத்தினார்.

முற்கால யாத்திரிகர் வழித்துணைக்கு கோல்களைக் கொண்டு சென்றனர். இன்றைய இளைஞர் வழிகாட்டிகளைப் பயன்படுத்துகின்றனர். இன்று எமது வழிகாட்டி இயேசுவின் நற்செய்தியாகிய விவிலியமாகும். இவ்வாண்டு ஆகஸ்ட் மாதம் ரோமாபுரியில் நடைபெறவிருக்கும் உலக இளைஞர் தினத்தில் பங்குபற்ற அயர்லாந்திலிருந்து 1000க்கு மேற்பட்ட இளைஞர் அங்கு செல்வர். நீங்கள் ரோமாபுரிக்கு சென்றாலும் செல்லாவிட்டாலும் விவிலியத்தைப் படித்து அதிலுள்ள நற்செய்தியைக் கண்டு உணருங்கள்." என்று இளைஞருக்காக இடம்பெற்ற திருப்பலியின் போது அவர் கூறினார்.

# புனித பூமியில் திருத்தந்தை

திருத்தந்தை 2ம் அருள் சின்னப்பர் யூபிலி ஆண்டின் யாத்திரையாகவே புனித பூமிக்கு மார்ச் மாதத்தில் தமது பயணத்தை மேற்கொண்டார். புனித விவிலியத்துடன் தொடர்பு கொண்ட இடங்களையும் கிறிஸ்துநாதரின் வாழ்வோடு தொடர்புகொண்ட இடங்களையும் தரிசிப்பதுடன், யூதமக்களோடும், பாலஸ்தீன மக்களோடும் நல்லுறவை வெளிப்படுத்துவதும், கீழைத் திருச்சபைகளுடன் ஒற்றுமை உறவை நாடுவதும் அவரது நோக்கமாக இருந்தது.

## இயேசு பிறந்த கெபியில்

பெத்லகேமில்திருத்தந்தை பிரான்ஸிஸ்கன் சபையினரின் மடத்தையும் 6ம் நூற்றாண்டில் கட்டப்பட்ட புனித கத்தரீன் ஆலயத்தையும் தரிசித்தார். இயேசு பிறந்த கெபியில், அவரது பிறப்பிடத்தைக் குறிக்கும் வெள்ளி நட்சத்திரத்தின் முன் முழந்தாளிட்டுச் செபித்தார். முன்னிட்டி வைக்கப்பட்டதாகக் கூறப்படும் இடத்தில் அவர் 20நிமிட நேரம் தனிமையில் செபித்தார்.

## இஸ்ராயேல் தலைவர்களோடு சந்திப்பு

மாடியறையில் திருப்பலியின் பின் திருத்தந்தை இஸ்ராயேலின் தலைமைக் குருக்கள் இருவரைச் சந்தித்தார். பின்னர் ஜனாதிபதி மாளிகைக்குச் சென்று ஜனாதிபதி எஸர் வீஸ்மனைச் சந்தித்தார். அவ்வேளையில் அங்கு பல பாராளுமன்ற உறுப்பினர்கள் சமூகமாயிருந்தனர்.

மார்ச் 24ஆம் திகதி அவர் இஸ்ரேலியப் பிரதமர் ஏகுட் பாராக்கைச் சந்தித்தார்.

## பாலஸ்தீன தலைவரோடு சந்திப்பு

பெத்லகேமிலுள்ள ஜனாதிபதி மாளிகையில் திருத்தந்தை பாலஸ்தீனத் தலைவர் யாசீர் அரபாத்தை சந்தித்தார். தமக்கு அளிக்கப்பட்ட வரவேற்புக்கு நன்றி தெரிவித்து, அப்பிரதேசத்தில் அமைதியை ஏற்படுத்துவதற்கு இது ஒரு முக்கிய வேளை எனக் குறிப்பிட்ட திருத்தந்தை,

"எமது சந்திப்பு கத்தோலிக்க திருச்சபை இப்பிரதேசத்தில் அமைதியை ஏற்படுத்துவதற்கு ஏனைய மக்களோடு உழைக்கும் என்பதை உறுதிப்படுத்துகிறது. இக் கனவுகள் நனவாவதற்கு பொறுமையோடும் துணிச்சலோடும் கூடிய உரையாடல் தான் ஒரே வழி. அதை நீங்களும்உணர்ந்திருக்கிறீர்கள்" என்று கூறினார்.

## செனக்கின் மாடியறையில்

மார்ச் 23ஆம் திகதி திருத்தந்தை இயேசுநாதர் கடைசி இராப்போசனத்தின் போது நற்கருணை, குருத்துவம், பச்சாத்தாபம் ஆகிய திருவருட்சாதனங்களை ஏற்படுத்திய மாடியறையில் புனித பூமியின் ஆயர்களோடும், தம்முடன் கூடவந்த ஆயர்களுடனும் திருப்பலி ஒப்புக்கொடுத்தார்.

அவ்வேளையில் அவர் "இராயப்பரும் அப்போஸ்தலர்களுமே திருச்சபையின் மாறாத விசுவாசத்தை வெளிப்படுத்த அவர்களது வழிவந்தோரின் வடிவிலே இங்கு வந்துள்ளார்கள் எனலாம்" என ஆழ்ந்த உணர்ச்சியுடன் கூறினார்.

## யாட் வாஷெம் நினைவாலயம்

யாட் வாஷெம் நினைவாலயம் நாஸிகளின் கொடுமையால் படுகொலை செய்யப்பட்ட 6 மில்லியன் யூதர்களின் நினைவாக அமைக்கப்பட்டது. 45 ஏக்கர் விஸ்தீரணத்தில் அமைக்கப்பட்டுள்ள இந்த நினைவாலயத்தில் அரும்பொருட்சாலைகள், காட்சி மண்டபங்கள், தகவல் நிலையங்கள், ஆவணக்களரி, பல்வேறு நினைவு மண்டபங்கள் நூல் நிலையம் போன்றன உண்டு. கொல்லப்பட்ட யூதர்கள் பற்றிய 80,000 நூல்கள் 100,000 புகைப்படங்கள், திரைப்படங்கள் ஆவணங்கள் இங்கு பேணப்படுகின்றன.

திருத்தந்தை முக்கிய பிரமுகர்களை வரவேற்பதற்கென அமைக்கப்பட்ட ஒரு மண்டபத்தில் பிரதமர் ஏகுட்பராக், நினைவாலயத்தின் இயக்குநர் இரு தலைமைக் குருக்கள் ஆகியோரால் வரவேற்கப்பட்டார்.

அங்கு திருத்தந்தை பேசுகையில் "நினைவுகள் நிறைந்த இந்த இடத்திலே எனது உள்ளம் ஒரு ஆழ்ந்த மௌனத்தையே தேடுகிறது. போலந்தில் எனது நண்பர்களும் அயலவர்களுமான எத்தனையோ யூதர் கொல்லப்பட்ட அனுபவம் எனக்கு நேரடியாகவே உண்டு. அப்படிக் கொல்லப்பட்ட இலட்சக்கணக்கான யூதர்களுக்கு வணக்கம் செலுத்த வந்துள்ளேன்.

மீண்டும் இத்தகைய கொடுமைகள்நிகழாதிருக்க வேண்டுமென்று இவற்றை நினைவுகூர விரும்புகிறோம். பழி வாங்குவதற்காகவோ பகைகொள்வதற்காகவோ அல்ல.

யூதர், கிறிஸ்தவர் ஆகிய நாம் இறைவெளிப்பாட்டின் ஒரே பாரம்பரியத்தைக் கொண்டிருக்கிறோம். கத்தோலிக்க திருச்சபையின் தலைவர் என்ற முறையில் கிறிஸ்தவர் யூதர் மீது காட்டிய பகைமைக்காக வருந்துகிறேன். திருச்சபை ஒருபோதும் இனவிரோதத்தை விரும்புவதில்லை. கடவுள் நம்பிக்கையற்ற நாஸ்திகக் கொள்கையை உடையவர்களே இத்தகைய படுகொலைகளை திட்டமிட்டுச் செய்ய முடியும்" என்று கூறினார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விடுதலையில் பிறக்கும் புது வாழ்வு

S.இராஜேஸ், மறைக்கல்வி நிலையம்.

### வாழ்வே பயணம்

எம் அன்றாட வாழ்விலே நீண்டதும் குறுகியதுமாகிய பல்வேறு பயணங்களை நாம் மேற்கொள்கின்றோம். இப் பயணங்களிலே பற்பல பயணிகளை சந்திக்கின்றோம். இச் சந்திப்புக்கள் வாழ்விலே மறக்கமுடியாத அனுபவங்களை வாழ்வின் புதிய உயிருட்டமுள்ள இலட்சிய நோக்குகளை எம்மிலே உருவாக்கி புதிய உறவுகளுக்கு உருக்கொடுக்கின்றன. நட்புறவும், பகிர்தலும், தோழமையும், இடர்களைத் தாங்கும் மனப்பலமும், பக்குவமும் வளர வழி சமைக்கின்றன.

### இறைமக்கள் வாழ்விலே பயணம்

எகிப்திலே சொல்லொண்ணா இன்னல்கள், அவலங்கள் மத்தியிலே வாழ்ந்த தம் சொந்த மக்களான இஸ்ராயேலின் அழுகுரல் கேட்டு அவர்களது வாழ்வுபெறும் பயணப் பாதையிலே இறைவன் அவர்களைச் சந்திக்கின்றார். "எகிப்தில் என் மக்கள் படும் துன்பத்தை என் கண்களால் கண்டேன்.... இறங்கி வந்துள்ளேன்" (விடு.பயணம் 3:7-10)

கானான் செல்லும் விடுதலைப் பயணப் பாதையிலே இறைவன் தம் வலிய கரத்தின் பலத்தால் மோயீசன் தலைமையில் தம் மக்களை விடுவித்து வழிநடத்தவிழைகின்றார். இறைவனது அற்புதச் செயல்கள், மோயீசனின் வழிகாட்டல், எகிப்திலே உண்ட விடுதலையின் பாஸ்காகடத்தல் உணவு இவையனைத்தும் கானான் நோக்கிய பயணப் பாதையிலே இறைமக்கள் இஸ்ராயேலருக்கு பலமும், பாலமுமாய் பயனளித்தன. வெற்றிக்கு வித்திட்டன.

### தடைகள் சூழ்ந்தும் தடைபடாப் பயணம்

பல்வேறு இடர்கள், தடைகள், துன்பங்கள், எதிர்பார்ப்புக்கள், ஏக்கங்கள் நிறைந்த விடுதலைப் பயணத்திலே இறைமக்கள் துவண்டு அவதியுற்று, நம்பிக்கையிழந்து சோர்வுற்றபோதெல்லாம் இறைவனின் அன்புக்கரம் அவரது மக்களோடு கூடவிருந்து செயற்பட்டது. விடுதலைப் பயணநூல் முழுவதும் இந் நிகழ்வை விதந்துரைக்கின்றது. சுதந்திர பூமியாகிய கானான் வள நிலத்திலே அடிமை நீங்கி அமைதியாகக் குடியிருந்து நடமாடும் வரை இறைவனது கருணை வளம் பல்வேறு வழிகளிலே தம் மக்களுக்கு அனுகூலமாயிருந்து வழிநடத்தியது.

இந்தப் பயணத்தில் உருவாகிய இறைமக்கள் புதிய குலமாக உருவாகி, வளர்ந்து இறைமகன் யேசுவின் இணையில்லா மீட்புப் பணிக்கு முடிவற்ற நித்திய விண்ணக எருசலேம் பயணத்திற்கு மானிட விடுதலையை நோக்கிய பயணப் பாதைக்கு வித்திட்டனர்.

### இயேசுவின் வாழ்விலே பயணம்

பாவ இருளிலே படர்ந்திருந்த மன்னுயிரை தம் வாழ்வினால், வார்த்தையினால், பாடுகள் - மரணம் - உயிர்ப்பாகிய பாஸ்கா கடத்தல் வழியாக மீட்டு வழிநடத்தும் உன்னத பணிக்காகவே இயேசு இவ்வுலகில் அவதரித்து பயணிக்கின்றார். இப் பாரிய பயணப் பாதையிலே பலரைச் சந்திக்கின்றார். இந்தச் சந்திப்பினால் பலர் அவர் பாதையிலே சங்கமிக்க, அவர் காலடியில் சரணடைய சாத்தியமாயிற்று.

### சந்திப்பிலே சங்கமமாகிய பயணிகள்

தாகசாந்தி பெற தண்ணீருக்காக கிணற்றடி வந்த சமாரியப் பெண்ணுடன் இயேசு உரையாடி உறவாடி "நான் கொடுக்கும் தண்ணீர் - அதைக் குடிப்பவருக்குள் பொங்கி எழும் ஊற்றாக மாறி நிலைவாழ்வு அளிக்கும் என தம் நிறை வாழ்வுப் பாதையிலே அவளையும் பங்காளியாக்குகிறார். (யோவான்4:9-26)

உணவுண்ண அழைத்த பரிசேயன் வீட்டிலே இயேசு சந்தித்த பெண் அவர் காலடியில் வந்து அழுது, தம் கண்ணீரால் அவர் பாதம் நனைத்து, கூந்தலால் துடைத்து, நறுமணம் பூசி தன் செயல்களால் அவரோடு சங்கமிக்கின்றாள். இயேசு அப் பெண்ணை நோக்கி "உனது நம்பிக்கை உன்னை மீட்டது. அமைதியுடன் செல்க! என அவளையும் தம்பயணப் பாதையிலே பரிவுடன் அழைக்கின்றார். (லூக்.7:36-50)

எரிக்கோ பயணப் பாதையிலே சக்கேயு என்னும் வரி தண்டுவோர் தலைவரை இயேசு சந்திக்கின்றார். இருவரது சந்திப்பும் "இன்று இந்த வீட்டிற்கு மீட்பு உண்டாயிற்று இழந்து போனதைத் தேடி மீட்கவே மானிட மகன் வந்திருக்கிறார்" என்ற வார்த்தையிலே சங்கமமாயின. இயேசுவின் பாதையிலே அவரும் வழி தொடர்கிறார்.

மீட்புப் பயணப் பாதையிலே இயேசுவின் வழிதொடர அவர் பணி பாரிலே பதிய, பயன்பெற தொடர்ந்து உழைக்கும் கரங்களாக அழைத்து அனுப்பப்பட்டனர் திருத்தூதர்கள்.

### திருத்தூதர்களது வாழ்விலே பயணங்கள்

"நீங்கள் போய் எல்லா மக்களினத்தாரையும் சீடராக்குங்கள்" (மத்:28-19) என்ற இயேசுவின் பணிப்புரையின்படி திருத்தூதர் பயணிக்கின்றனர். அவர்கள் உலகின் கடையெல்லைவரை சென்று இறைவனது மீட்புக்கு, இறையரசிற்கு சான்று பகர்கின்றனர். இதற்காக தம் வாழ்வையே அர்ப்பணித்து, இரத்தம் சிந்தி உயிர்த்தியாகம் செய்து எமக்குச் சான்றாயினர்.

### ஆதிக் கிறிஸ்தவ ஒன்றியத்திலே மலர்ந்த பயணம்

அன்புறவு, செபம், பலி - நற்கருணைப் பகிர்வு என்பவற்றிலே கிறிஸ்துவையே மையப்படுத்தி, அவரது வார்த்தையை வாழ்வாக்கினர் ஆதிக் கிறிஸ்தவ மக்கள். அவர்களது சகோதரத்துவமும், குடும்ப உறவும், புரிந்துணர்வும், பகிர்ந்து வாழ்தலும் கிறிஸ்தவ ஒன்றியங்கள் பல உருவாகவித்திட்டன. (திருத்தூதர் பணி 2: 42-47) மீட்படைந்தோர் நாளாந்தம் அவர்களோடு சேர்க்கப்பட்டதனால், கிறிஸ்தவம் யூதரிடையே வேரூன்றத் தொடங்கியது. அதே வேளை ஸ்தேவானின் கொலை ஒரு பெரிய யூத கலாபனையின் ஆரம்பமான கட்டத்திலே எருசலேமுக்கு வெளியேயும் தீவிரமாகப் பரவ வலுவூட்டியது. கிறிஸ்தவ விசுவாசிகளின் அதிசயிக்கத்தக்க கிறிஸ்தவ விழுமிய வாழ்க்கைச் சான்றே எனலாம். சென்ற இடமெல்லாம் நற்செய்தி சான்று பகர்ந்து கிறிஸ்தவ , சமூகம் ஒளிர்விட்டு மிளிர கிறிஸ்தவர்கள் வழிவகுத்தனர்.

### நற்கருணைப் பகிர்விலே எமது பயணங்கள்

அப்பம் ஒன்றே ஆதலால் நாம் பலராயினும் ஒரே உடலாய் இருக்கின்றோம். ஏனெனில் நாம் அனைவரும் அந்த ஒரே அப்பத்தில் பங்குகொள்கின்றோம். (1கொரி 10:17) என தூய பவுல் எமது விண்ணகப் பயணத்தின் பகிர்வு வாழ்வை சாட்டுகின்றார்.

### உரிமை வாழ்வுக்கு உருக்கொடுக்க பயணிப்போம்

திருமுழுக்கிலே உரிமை வாழ்வுக்கு உரித்தாளிகளான நாம் கிறிஸ்துவின் பாஸ்காக் கடத்தலிலே பங்காளிகளாகி விண்ணக எருசலேம் நோக்கி பயணிக்கின்றோம். எமது இவ்வுலக வாழ்வே பயணம். இறைவனை நோக்கி நடக்கும் பயணம். இப்பயணப் பாதைக்கு இயேசுவே எல்லாமாக நிறைந்திருந்து வழிகாட்டுபவர். பயணப் பாதையிலே- சந்திப்பவர்கள் பலர். ஏற்படும் உறவுகள் பல. உறவுகளால் உண்டாகும் உராய்வுகள், சிக்கல்கள் பல. மகிழ்வும் - தோழமையும் - பகிர்வும் பல. இவற்றையெல்லாம் ஏற்று பலத்துடன் - திடத்துடன் பயணிக்க உறுதுணையளிக்கும் பயண உணவு நற்கருணையே.

### சகோதர சங்கமத்திலே பயணிப்போம்

இரண்டாம் வத்.சங்கம் கூறுவதுபோல நற்கருணை அன்பின் அருட்சாதனம், ஒற்றுமையின் அடையாளம், பரம அன்பின் பிணைப்பு, பாஸ்கா விருந்து இவ்விருந்திலே கிறிஸ்து உணவாகின்றார். வரவிருக்கும் மாட்சிமையின் உறுதிமொழி நமக்கு அருளப்படுகின்றது. (இறைபணி அதி 2 - எண் -47)

சகோதர உறவிலே, தோழமையிலே பயணிக்கும் எமக்கு தெளிவும், தேறுதலும், பலமும் அருளுகின்ற அரிய சாதனமே நற்கருணை விருந்து. இயேசுவே எம் பயணப் பாதைக்கு பக்கபலம், பாதுகாவல், வழிக்கு ஒளியும், உணவும்.

### பகைமையை மறந்து பரிவிலே பயணிப்போம்

பயணப் பாதையிலே ஏற்படும் சந்திப்பிலே வளரும் உறவிலே, உறவின் நெருக்கத்திலே பகைமையும் தளிர்விட, தளர்ந்த உறவிலே உரசல்கள் ஏற்பட ஏதுவாகின்றது.

உயிருள்ள கல்லும் தூய இனமுமாக மீட்கப்பட்ட புதிய இனமாகிய நாம் "ஆண்டவர் எத்துணை இனியவர் என்பதை சுவைத்திருந்தால் எல்லாவகையான தீமையையும், வஞ்சகத்தையும், வெளிவேடம், பொறாமை, அவதூறு ஆகியவற்றை அகற்றுங்கள் புதிதாகப் பிறந்த குழந்தைகள் போல் வஞ்சகமற்ற ஞானப்பாலை அருந்த ஆர்வமுள்ளவர்களாயிருங்கள். இதை அருந்துவதால் நீங்கள் மீட்பில் வளர்வீர்கள்" (1பேதுரு 2:1-3) என்ற புனித பேதுருவின் அறிவுரையை மனக்கண் கொண்டு மீட்பின் பாதையிலே வழிநடப்போம்.

கிறிஸ்துவின் உதிரத்தால் புதுவாழ்வுபெற்று விண்ணகம் நோக்கி வழிநடக்கும் பயணப் பாதையிலே கிறிஸ்துவின் பாஸ்காப் பலியிலே இணைந்து, விண்ணக நற்கருணை உணவால் ஊட்டம்பெற்று பகைமையை மறந்து பரிவிலே பயணிப்போம். "தூய உள்ளத்தோடு ஒருவருக்கொருவா ஆழ்ந்த அன்பு காட்டுங்கள்" (1பேதுரு 1-22)

### இடர்கள், தடைகளைக் களைந்து பாசத்திலே பயணிப்போம்

அன்பிலே, பகிர்தலிலே மலர்ந்த கிறிஸ்தவர்களாகிய நாம் எத்தகைய பாசப்பிணைப்புகளிலே வளர்கின்றோம், வாழுகின்றோம் என எண்ணிப் பார்ப்போம். நற்கருணை உணவினால் மூவொரு இறைவனின் பாசப்பிணைப்பிலே இணைந்த எம்மிடையே எத்தகைய ஏற்றத் தாழ்வுகள்!

எண்ணிப் பார்ப்போம்.

ஏழை - பணக்காரன், படித்தவன் - பாமரன், உயர்ந்தவன் - தாழ்ந்தவன், எனப் பல குல, நிற, மொழி, இட, வர்க்க பேதங்களை பாராட்டுகின்றோம். வறுமையும், தீமையும், நீதியும், உண்மையும், பகிர்தலும், சகோதரத்துவமும் ஓங்க எவ்வகையில் உழைக்கின்றோம்...?

பட்டினிச்சாவு அவல மரணம், சிறை, இடம்பெயர்வு, நோய், விரக்தி, பயம், ஏக்கம் இத்தகையவை எம் மத்தியிலே இன்னும் நிலவக் காரணிகள் எவை என சிந்திப்போம்.

துயர்துடைக்கும் பணிகளிலே அன்பிய உருவாக்கல்களிலே பகிர்ந்து மகிழ்ந்து புதுக்கிறிஸ்தவ உலகம் செயலிலே ஒன்றிணைவோம்.

### ஆழ்ந்த அர்ப்பண உணர்வோடு பயணிப்போம்

வளம் அளிக்கும் இறைவார்த்தையின் ஒலியோடு பாஸ்கா கடத்தலாகிய நற்கருணை வழியுண்விலே ஊட்டம்பெற்று இறையரசிலே இணைந்து பயனளிக்கும் எமக்கு புனித பவுல் தரும் அறிவுரை "பரிவு, இரக்கம், நல்லெண்ணம், மனத்தாழ்மை, கனிவு, பொறுமை ஆகிய பண்புகளால் உங்களை அணி செய்யுங்கள்" 3:12 என்பதே.

ஆகவே "பகலைச் சார்ந்த நாம் அறிவுத்தெளிவோடு இருப்போம்இ நம்பிக்கையையும், அன்பையும் மார்புக் கவசமாகவும், மீட்புப் பெறுவோம் என்னும் எதிர்நோக்கைத் தலைச்சீராகவும் அணிந்துகொள்வோம்" (1தெச.5:8) என்ற புனித பவுலின் அர்ப்பண உரையுடன் இறைமகன் இயேசுவின் பாஸ்காவிலே ஒன்றிணைந்து ஒருவருக்கொருவர் தோழமையுடன் ஊக்கமூட்டி அர்ப்பண பாதையிலே விண்ணம் நோக்கிப் பயணிப்போம்.

## உடைத்திட்டு வாடா உத்தமனே!

இலங்கை மாதா அரவணைப்பில்
இருக்கும் இந்த நாட்டினிலே
விலங்கு போட்டு மனதிடையே
விதண்டாவாதம் பேசுவதேன்?

கலந்து கிடக்கும் இனவாதம்.
கலைத்து நாமும் வாழ்வதற்கு
மலர்ந்து மனதில் கிறிஸ்தவத்தை
மணம் பரப்ப விரைந்திடுவீர்!

புதைந்துபோன எம்மினத்தின்
புகைந்து போன உரிமைகள் போல்
சிதைந்து போகா வாழ்வமைக்க
சிந்தையில் மனிதம் ஊட்டிடுவோம்!

விதைகள் விழுந்த நன்நிலமாய்
விளைச்சல் பல்கிப் பெருகிடவே!
கதைகள் எங்கும் கண்ணியமாய்
கருணைக் கதிர்கள் கொடுத்திடுவோம்!

அடுத்து வரும் யூபிலியை
அர்த்தம் கொண்டு அனுபவிக்க
மடுப்போல் மனதில் அன்னையவள்
மாலை தனை நாம் ஓதிடுவோம்!

தடுப்புப் போட்ட உன்மனதை
தன்னையே தந்த யேசுவாலே
உடைத்திட்டு வாடா உத்தமனே!
உலகம் என்பது மாயைதானே!

ஆ.ஜெனிசன் றொனால்ட்
ஈச்சமோட்டை
புனித அன்னாள் ஆலயம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## "ஈடுபாடு இல்லாத திருச்சபையாக அல்ல மாறாக திட்டமிட்டு முன்னேறும் திருச்சபையாக மலரவேண்டும்"

இளவாலை புனித யூதாதேயு ஆலய இளையோர் மன்றத்தால் 04-02-2000 வெள்ளி அன்று ஆலய மண்டபத்தில் (ஒழுங்குசெய்யப்பட்டு) நடாத்தப்பட்ட உளவியல் ஆன்மீக தலைமைத்துவக் கருத்தரங்கில் உரையாற்றும்போது அருள் தந்தை சா.வே.கிருபானந்தன் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

யாழ். அகவொளி நிலையத்தில் இருந்துவந்த செல்வன் நியூட்டன், செல்வன் யூடிதயான், செல்வி மொறின், செல்வி செறின் ஆகியோர் அடங்கிய குழுவினரால் இளமை, தலைமைத்துவம், பருவமாறுதல்கள் ஆகிய தலைப்பில் வழங்கப்பட்ட கருத்துரைகளைத் தொடர்ந்து இடம்பெற்ற குழுஆய்வில் இருந்து பங்குபற்றியோர் பல பயன்களைப் பெற்றனர். தொடர்ந்து காண்பிக்கப்பட்ட "இளையோர்" எனும் திரைப்படமும் அதற்கான விளக்கமும் மிகவும் பயனுள்ளதாக அமைந்தது.

பிற்பகல் 3மணிக்கு இடம்பெற்ற குழு அமர்வினை அருள் தந்தை சா.வே.கிருபானந்தன் அடிகளார் வழி நடத்தினார். அவரின் வழிகாட்டலில் இருந்து நாம், பிளவுபட்ட, ஈடுபாடில்லாத, துண்புறும், செத்துப்போன திருச்சபையாக இருக்கும் நிலைகளை இனம்கண்டு திட்டமிட்டு முன்னேறும் திருச்சபையாக மாற்றி அமைக்கப்பட வேண்டும் என அறிந்துகொண்டோம். இளவாலை பங்குத்தந்தை அருள் திரு அன்ரனிபாலா அவர்களின் தலைமையில் இடம்பெற்ற இக் கருத்தரங்கைத் தொடர்ந்து இளையோர் மன்ற நடப்பாண்டு நிர்வாகம் தெரிவுசெய்யப்பட்டனர். யோ.லோறன்ஸ் தலைவராகவும், மே.மேரி யஸ்மின் செயலாளராகவும், சி.டினேஸ் உபதலைவராகவும், ம.ஜெனிட்டா உபசெயலாளராகவும், நிதர்சன் பொருளாளராகவும், சே.சுபோதினி பத்திராதிபராகவும் றதன் நிர்வாக உறுப்பினராகவும் தெரிவு செய்யப்பட்டனர்.

ம.மக்ஸ்வெல்
(புனித யூதாதேயு ஆலய வாசகர் வட்டம், இளவாலை)

## களத்தில்

## அருட்தந்தை எட்றியன் யோசவ் அடிகளுடன் ஒரு பொழுது

**இன்றைய சமய அறிவு திருப்தியாக உள்ளதா?**

சமயம் பேசப்படுகின்றது. வாழப்படவில்லை. சிறுவர் மட்டில் மறையறிவு கருத்தாழம் இல்லாததாய் பரீட்சைக்கு மட்டும் படிப்பென்ற நிலையாகிவிட்டது.

**அது எப்படி இருக்க வேண்டுமெனக் கருதுகிறீர்கள்?**

உழுது விதைக்கப்படும் நிலம் போல மறைமக்கள் மனங்களில் விதைக்கப்படவேண்டும். தூய ஆவியின் வல்லமையால் ஆன்மீகம் விதைக்கப்பட வேண்டிய தேவை உள்ளது.

அர்த்தங்கள் புரியாமல் செபங்களைச் சொல்லுகிறார்கள். பெற்றோர், ஆசிரியர், வழிகாட்டிகள் தகுந்தமுறையில் விளக்கமளித்து சிறுவர் மனதில் ஆன்மீகத்தை விதைக்கவேண்டும். மறையறிவு குன்றுவதால் அமைதி, பகிர்வு, ஒற்றுமை ஆகியவை சீர்குலைகின்றன.

**இது குறித்து இன்றைய பெற்றோர் போதிய கரிசனை எடுக்கவில்லை என எண்ணுகிறீர்களா?**

முன்னோர் தூய ஆவி, காவல் சம்மனசு போன்றவை பற்றி சிறுபிராயத்திலேயே எடுத்துரைத்து ஆன்மீகநெறிகள் பற்றி விளக்கம் கொடுப்பார்கள். இப்போது பெற்றோர் பிள்ளைகளோடு உரையாடி உறவாட நேரமில்லை என்று கூறி உறவில் அன்னியமாகிறார்கள்.

சென்மபாவம், கன்மபாவம், சாவான பாவம் பற்றி பெரியோரே விளக்கமளிப்பதில் தடுமாறுகிறார்கள்.

உலக மாயைக்குள் T.V, வானொலி, திரைப்படம் எனும் கேளிக்கைகளில் மூழ்கி பாவம் எது? புண்ணியம் எது? எனப் பகுத்துப் பார்க்கத் தெரியாத உலகில் ஆன்மீகம் தேடப்படும் நிலையாகிவிட்டது.

**இதற்கு மாற்று வழியே இல்லையா?**

மாற்றுவழி உண்டு. அதைச் செயல்படுத்துவதில் பொறுப்பான பெற்றோரும் வழிகாட்டிகளும் தம் பொறுப்புக்களை உணர்ந்து தாம் முதலில் ஆன்மீக தேடலுடன் தூய பணியில் இணைய வேண்டும். ஆரம்பத்தில் இயேசு கற்பித்த செபத்தை ஒவ்வொரு வரியாக விளக்கமிட்டு செபிக்கக் கற்றுக்கொடுப்பதுடன் சேர்ந்து குடும்பமாக செபிக்க வேண்டும். இல்லையேல் எதை விதைப்போமோ அதைத் தானே அறுவடை செய்யமுடியும்.

## பரு.மறைக்கோட்ட பொதுநிலையினர் கழகம்

பருத்தித்துறை மறைக்கோட்ட பங்குகளின் பொதுநிலையினருக்கான கழகம் கடந்த 17.3.2000 அன்று புனித. தோமையார் ஆலயத்தில் அங்குரார்ப்பணம் செய்து வைக்கப்பட்டது.

மேற்படி நிகழ்வு பருத்தித்துறை மறைக்கோட்ட முதல்வர் அருள்தந்தை இருதயதாஸ் அடிகள் தலைமையில் பங்கு ஆலயங்களின் பிரதிநிதிகள் 16 பேரும் பொதுநிலையினர் கழகப் பொறுப்பாளர் அருள்தந்தை யேசுரட்ணம் அடிகளார், அச்சுவேலிப் பங்குத்தந்தை அருள் திரு ரவிச்சந்திரன் அடிகள் ஆகியோரும் ஒன்றுகூடி ஆரம்பித்து வைத்தனர்.

மறைக்கோட்ட முதல்வர் தனது ஆரம்ப உரையில் "திருச்சபையில் பொதுநிலையினரின் பங்களிப்பு மிக முக்கியமானது. ஒவ்வொரு மறைக்கோட்டத்திலும் பொதுநிலையினருக்கு ஓர் கழகம் உருவாக்கப்பட வேண்டும் அதனையே இன்று எமது கோட்ட ஆலய பிரதிநிதிகளை அழைத்து ஆரம்பித்து வைப்பதில் மகிழ்ச்சியடைகிறேன்" என்று கூறினார். அருள்தந்தை யேசுரட்ணம் அடிகளார் கழகம் பற்றிக் கருத்துரை வழங்கினார். பொதுநிலையினரின் பங்களிப்பு என்ன, இந்தக் கழகம் எவ்வாறு செயற்பட வேண்டும் என்று அருள்தந்தை ரவிச்சந்திரன் விளக்கவுரை நிகழ்த்தினார். தொடர்ந்து இக் கழகத்திற்கான நிர்வாகிகள் தெரிவு இடம்பெற்றது. அதில் தலைவராக திரு. சீ.அந்தோனிமுத்து (புனித மரியாள் ஆலயம், பருத்தித்துறை), செயலாளராக திரு.அ.செல்வராஜன் (புனித. இராயப்பர் ஆலயம், கச்சாய்), பொருளாளராக திரு.ச.அ.செல்வராஜா (பரலோக அன்னை ஆலயம், கரவெட்டி) நிர்வாக உறுப்பினராக திரு.க.செபமாலை (சுப்பர்மடம்), செல்வி அ.மேரிஜெலோனா (சவேரியார் ஆலயம், சக்கோட்டை) ஆகியோர் தெரிவு செய்யப்பட்டனர்.

அ. செல்வராஜன்
(கழக செயலாளர்)

## திருப்பாலத்துவ சபை பெருவிழா

யுத்தப் பிரதேசத்தில் அச்சத்துடன் வாழும் மக்களிடையே மாசி மாதம் 27ஆம் திகதி ஞாயிறு அன்று திருபாலத்துவ சபைப் பெருவிழா மிகச் சிறப்பாக இறைபக்தியுடன் கொண்டாடப்பட்டது. இவ்விழாவினை வெகுவிமரிசையாக கொண்டாடுவதற்கு இச்சபையினை வழிநடத்தும் அருள் சகோதரி அமலி அவர்களின் செயற்றின் போற்றத்தக்கது. அன்றைய திருப்பலியை ஒப்புக்கொடுத்த பங்குத் தந்தை பிரான்சீஸ் அடிகளார் தனது மறையுரையில் இப்பாலத்துவ சபையானது பிரான்ஸ் நாட்டில் வாழந்த மேற்றிராணியார் பொபின் ஜான்சி அவர்களால் ஆரம்பிக்கப்பட்டது என்றும், இதனை கருத்திற்கொண்ட பரிசுத்த தந்தை 2ஆம் அருளப்ப சின்னப்பர் 1984 ஆம் ஆண்டு நடைபெற்ற உரோமபுரி மாநாட்டில் இதனை அங்கீகரித்து சிறுவர்கள் மீட்பின் கருவிகள் எனக்கூறி தனது நேரடிக் கண்காணிப்பில் வழிநடத்தி வருகின்றார் என்றும் எடுத்துரைத்தார். மேலும் திரு பாலத்துவ சபை சிறார்கள், ஏந்தி வந்த வெண்நிறக் கொடியில் பொறிக்கப்பட்டிருந்த மூன்று நட்சேத்திரங்களின் கருத்தினை சிறப்பாக வெளிப்படுத்தினார்.

1ஆவது நட்சேத்திரமானது சிறுவர்கள் தினமும் இறைவனோடு ஒன்றித்து செபம் செய்தலை வெளிப்படுத்துகின்றது. என்றும், 2ஆவது நட்சேத்திரமானது சிறார்கள் ஏழை, எளியோர், கைவிடப்பட்டோர் மீது பரிவு, இரக்கம் காண்பித்து இறைவனால் எமக்கு கொடுக்கப்பட்டதை பகிர்ந்து வாழவேண்டும் என்பதையும்,,3ஆவது நட்சேத்திரமானது இயேசுபிரான் போதித்த வார்த்தையை வேதாகமத்தில் படித்து அதை மக்களுக்கு பரப்பவேண்டும் என்பதையும் எடுத்துக்காட்டி நிற்கின்றது என்றும் எடுத்துரைத்தார். அவர் தொடர்ந்தும் தனது உரையில் சிறுவர்களின் உள்ளம் வெள்ளை வெற்றுத்தாளுக்கு ஒப்பானது என்றும் அவ் வெள்ளைத் தாளில் முதன் முதலாக எவை எழுதப்படுகின்றதோ அவைதான் அவர்களின் வாழ்வில் வெளிப்படும் என்றும் இதற்கு இச்சிறார்களின் பெற்றோர் கவனம் எடுக்கவேண்டும் எனவும் கூறினார்.

மரியநாயகம்
(தாளையடி நிருபர்)

## புனித பிரான்சிஸ்கன் பொதுநிலையினர் சபையின்

## தவக்காலத் தியானம்

25.03.2000இல் சபையின் தவக்கால முழுநாள் தியானத்தை ஆன்மீக இயக்குனர் ஜே.பி.ஈ. செல்வராஜா அடிகளார் காலை 9.30 மணியளவில் யாழ். மரியன்னை பேராலயத்தில் ஆரம்பித்து வைத்தார். சமாதான வழிபாட்டுடன் தியானம் ஆரம்பமானது.

நற்கருணையில் புனித அசிசியார் கொண்டிருந்த ஈடுபாட்டையும் புனிதரின் எளிமைநிறை தாழ்மையான வாழ்வு முறையையும் அருள்திரு லூயிஸ் பொன்னையா அ.ம.தி. அடிகளார் சபையோரின் உள்ளத்தில் உறையும் வண்ணம் அழுத்தம் திருத்தமாக எடுத்துரைத்தார். இயேசுவின் பாடுகள், சிலுவை மரணம், உயிர்ப்பு என்னும் உயிரூட்டும் தியாக வாழ்வால் நாம் பெற்ற நற்கருணை என்னும் ஜீவ உணவின் அருமையினை எம் உள்ளங்களில் அடிகளார் ஊன்றிவிட்டார்.

நீங்களோ கிறிஸ்துவின் உடல் ஒவ்வொருவரும் ஒவ்வொரு உறுப்பு (1கொரி.12:27) என்பதன் உள்ளார்ந்த அர்த்தத்தை அழகுற விளக்கி எம்மை இயேசுவோடு இணைத்து பசாசின் தந்திரங்களை ஒன்றிணைந்து எதிர்த்துப் போராட அடிகளார் அழைப்பு விடுத்தார்.

பழைய ஏற்பாட்டு விடுதலைப் பயணத்தின் இறை பராமரிப்பு உடன்படிக்கையை விளக்கி இயேசுவின் தியாக வாழ்வின் நற்கருணையூடான விடுதலை வாழ்வை இதயத்தில் மலரச் செய்தார். தொடர்ந்து அருளுரை ஆற்றிய அடிகளார் சிலை வழிபாட்டின் தன்மையையும் புனிதர்களுக்கு நாம் வழங்கும் வணக்கத்தையும் தெளிவுற விளக்கி சபையோரை தெளியப்படுத்தியது குறிப்பிடத்தக்கதும் பாராட்டுக்குரியதுமாகும்.

அருள்திரு ஆர்.சி.எக்ஸ். நேசராசா அடிகளார் மறையுரைகளூடாகவும் செபங்களூடாகவும் நற்கருணை ஆண்டவரை ஸ்துதித்த சபையோருக்கு மௌன தியானத்தின் மகத்துவம் பற்றி சிறிய விளக்கம் கொடுத்து உற்சாகப்படுத்தினார்.

உடல், உள ஆன்மீக நலம் சிறப்புற குணமாக்கும் வழிபாட்டை அருள்திரு லோறன்ஸ் அடிகளார் சிரமம் பாராது நிறைவேற்றினார். இது உள்ளத்துச் சுமை குறைந்து இதயசுகம் பெற்றுக்கொள்ள கிடைத்த அரும்பாக்கியம் என்பதைச் சபையோர் உணர்ந்து கொண்டார்கள்.

சபைத் தலைவர் சகோதரர் எல்.சீ.நீக்கிலஸ் (பப்பா) அவர்கள் முழுநாள் தியானத்துக்கு சில தடைகள் நேரிட்டபோதும் இறையருள் வேண்டி சவால்களை நீக்கி சபையோரின் முழு ஒத்துழைப்புடனும் நடாத்தி முடித்தது குறிப்பிடத்தக்கதாகும்.

சகோதரி சூ.மேரி இராஜேஸ்கனி, அங்.எண்-555

## "கிறிஸ்தவ மதிப்பீடுகளை வளர்க்கும் அன்புக் குடும்பமே"

இளவாலைப் பங்கில் இடம்பெற்றுவரும் மகாஜூபிலி ஒடுக்க செயற்பாடுகளில் ஒன்றாக 25.03.2000 அன்று புனித அன்னாள் ஆலயத்திலும், புனித யாகப்பர் ஆலயத்திலும் பெற்றோருக்கான "குடும்ப வாழ்வுக் கருத்தரங்கு" நடைபெற்றபோதே மேற்படி கூற்று வலியுறுத்தப்பட்டது.

ஆன்மீக வளர்ச்சியும் சமூக விழிப்புணர்வும் கொண்ட கிறிஸ்தவ சமுதாயத்தைக் கட்டியெழுப்புவது குடும்பங்களே என்றும் குடும்பங்களில் பரஸ்பர நல்லுறவும், ஆரோக்கியமான புரிந்துணர்வும் ஏற்படும் போதுதான் ஒற்றுமையுடைய கிறிஸ்தவ விழுமியங்களை கொண்டு விளங்கும். நற்சமூகம் உருவாக முடியும். செயற்கை முறையிலான கருச்சிதைவை திருச்சபை கண்டிப்பாக எதிர்க்கிறது. இயற்கை முறையிலான குடும்பக் கட்டுப்பாட்டை ஆதரிக்கிறது. ஆன்மீக ஆற்றுப்படுத்தலூடாக வாழ்வின் சிறந்த மதிப்பீடுகளை எம் குடும்பங்களில் வளர்ப்பதன் மூலம் பெற்றோர்கள் பிள்ளைகளுக்கு முன்மாதிரிகையான வழிகாட்டிகளாகத் துலங்க முடியும் என்றும் கருத்துக்கள் வலியுறுத்தப்பட்டன.

இக் கருத்தரங்கினை "அகவொளி" இல்ல இயக்குனரான அருள்திரு. S.J. இராஜநாயகம், அடிகளாரும் மறையாசிரியர்களான திரு.சௌந்தரநாயகம், திரு.அந்தோனிப்பிள்ளை ஆகியோரும் இணைந்து சிறப்பான முறையில் நெறிப்படுத்தினர். இதே போன்று சுத்தமும் சுகவாழ்வும், மறைவாழ்வுக் கல்வி, திருவழிபாடு, திருவிவிலியமும் பொதுமொழி பெயர்ப்பும், மது போதைவஸ்து தரும் தீமைகள், உளவாற்றுப்படுத்தல் கருத்தரங்குகளும், சிறுவர் இளையோர், பாசறைகளும் இடம்பெற இருப்பது குறிப்பிடத்தக்கதாகும்.

S.J.பொஸ்கோ
புனித யாகப்பர் ஆலயம்
இளவாலை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வணக்க மாதத்தில் சொல்லக்கூடிய விவிலிய செபமாலை

**மகிழ்வு மறையுண்மைகள்**

**அ. கபியேல் தூதர் கன்னி மரியாளுக்குத் தூதுரைத்ததைத் தியானித்து, நாம் தாழ்ச்சியுடன் வாழவரம் கேட்போமாக. (கர்த்தர் கற்பித்த செபம்)**

01. கபிரியேல் என்னும் வானதூதரைக் கடவுள் ஒரு கன்னியிடம் அனுப்பினார் அவர் பெயர் மரியா.... (லூக். 1:26-27) அருள் நிறைந்த....

02. அருள் மிகப் பெற்றவரே வாழ்க! ஆண்டவர் உம்மோடு இருக்கிறார். (லூக். 1:28) அருள் நிறைந்த....

03. இவ்வார்த்தைகளைக் கேட்டு அவர் கலங்கி, இந்த வாழ்த்து எத்த கையதோ என்று எண்ணிக் கொண்டிருந்தார். (லூக். 1:29) அருள் நிறைந்த....

04. வானதூதர் அவரைப் பார்த்து, 'மரியா அஞ்ச வேண்டாம்' கடவுளின் அருளைக் கண்டடைந்துள்ளீர். (லூக். 1:30) அருள் நிறைந்த....

05. "இதோ கருவுற்று ஒரு மகனைப் பெறுவீர், அவருக்கு இயேசு என்னும் பெயரிடுவீர்" (லூக். 1:31) அருள் நிறைந்த....

06. அவர் பெரியவராயிருப்பார், உன்னத கடவுளின் மகன் எனப்படுவார். அவருடைய ஆட்சிக்கு முடிவே இராது. (லூக். 1:32-33) அருள் நிறைந்த....

07. மரியா வானதூதரிடம் "இது எப்படி நிகழும்? நான் கன்னியாயிற்றே" என்றார். (லூக். 1:34) அருள் நிறைந்த....

08. வானதூதர் அவரிடம் "தூய ஆவி உம்மீது வரும். உன்னத கடவுளின் வல்லமை உம்மேல் நிழலிடும். (லூக். 1:35) அருள் நிறைந்த....

09. ஆதலால் உம்மிடம் பிறக்கப்போகும் குழந்தை இறைமகன் எனப்படும். (லூக். 1:35) அருள் நிறைந்த....

10. "நான் ஆண்டவரின் அடிமை உம் சொற்படியே எனக்கு நிகழட்டும். (லூக். 1:1-38) அருள் நிறைந்த....

பிதாவுக்கும் சுதனுக்கும்..../ஓ என் இயேசுவே...:!

**(ஆ) தேவ அன்னை எலிசபெத்தைச் சந்தித்ததைத் தியானித்து, நாம் பிறர் அன்பில்வளரச் செபிப்போமாக. (லூக். 1:39-53) (கர்த்தர் கற்பித்த செபம்).**

01. அதன் பின் மரியா புறப்பட்டு யூதேய மலைநாட்டில் உள்ள ஓர் ஊரு க்கு விரைந்து சென்று செக்கரியாவின் வீட்டை அடைந்து, எலிசெபத்தை வாழ்த்தினார். (லூக். 1:39-40) அருள் நிறைந்த....

02. மரியாவின் வாழ்த்தை எலிசபெத் கேட்டபொழுது அவர் வயிற்றில் இருந்த குழந்தை மகிழ்ச்சியால் துள்ளிற்று. எலிசபெத் தூய ஆவியால் முற் றிலும் ஆட்கொள்ளப்பட்டார். (லூக். 1:41) அருள் நிறைந்த....

03. எலிசபெத் உரத்த குரலில் "பெண்களுக்குள் நீர் ஆசி பெற்றவர்; உம் வயிற்றில் வளரும் குழந்தையும் ஆசிபெற்றதே. (லூக். 1:42) அருள்....

04. ஆண்டவர் உமக்குச் சொன்னவை நிறைவேறும் என்று நம்பிய நீர் பேறு பெற்றவர். (லூக். 1:45) அருள் நிறைந்த....

05. மரியா உரைத்தது. ஆண்டவரை எனது உள்ளம் போற்றி பெருமைப்ப டுத்துகின்றது. என் மீட்பராம் கடவுளை நினைத்து என் மனம் பேருவகை கொள்கிறது. ஏனெனில் அவர்தம் அடிமையின் தாழ் நிலையைக் கண்ணோக் கினார். (லூக். 1:47-48) அருள் நிறைந்த....

06. இது முதல் எல்லாத் தலைமுறையினரும் என்னைப் பேறுபெற்றவர் என்பர். ஏனெனில் வல்லவராம் கடவுள் எனக்கு அரும்பெரும் செயல் செய் துள்ளார். (லூக். 1:49) அருள் நிறைந்த....

07. தூயவர் என்பதே அவர் பெயர். அவருக்கு அஞ்சி நடப்போருக்கு தலைமுறை தலைமுறையாய் அவர் இரக்கம் காட்டி வருகிறார். (லூக். 1:50) அருள் நிறைந்த....

08. அவர் தம் தோள் வலிமையைக் காட்டியுள்ளார். உள்ளத்தில் செருக் குடன் சிந்திப்போரை சிதறடித்து வருகிறார். (லூக். 1:51) அருள் நிறைந்த....

09. வலியோரை அரியணையினின்று தூக்கி எறிந்துள்ளார்; தாழ்நிலையில் இருப்பவரை உயர்த்துகிறார். (லூக். 1-52) அருள் நிறைந்த....

10. பசித்தோரை நலன்களால் நிரப்பியுள்ளார்; செல்வரை வெறுங்கையராய் அனுப்பியருக்கிறார். (லூக். 1:53) அருள் நிறைந்த....

பிதாவுக்கும் சுதனுக்கும்.../ஓ என் இயேசுவே....!

**(இ) இயேசுவின் பிறப்பைத் தியானித்து நாம் எளிமையாய் வாழச் செபிப்போமாக. (லூக். 2:6-19, மத்.2:11-12) (கர்த்தர் கற்பித்த செபம்)**

01. பெத்லகேமில் இருந்தபோது மரியாவுக்கு பேறுகாலம் வந்தது. (லூக். 2:6) அருள் நிறைந்த....

02. அவர் தம் தலைமகனைப் பெற்றெடுத்து துணிகளிலூ பொதிந்தார். அருள் நிறைந்த.... (லூக். 2:7)

03. அவர் அவரைத் தீவனத் தொட்டியில் கிடத்தினார். ஏனெனில் சத் திரத்தில் அவர்களுக்கு இடம் கிடைக்கவில்லை. (லூக். 2:7) அருள் நிறைந்த....

04. அதே பகுதியில் இடையர்கள் தங்கி தங்கள் கிடையைக் காவல் காத்துக் கொண்டிருந்தார்கள். ஆண்டவருடைய தூதர் அவர்களுக்குத் தோன்றி னார். (லூக். 2:8-9) அருள் நிறைந்த....

05. "அஞ்சாதீர்கள்", இதோ எல்லா மக்களுக்கும் பெரும் மகிழ்ச்சியூட்டும் நற்செய்தியை உங்களுக்கு அறிவிக்கின்றேன்." (லூக். 2:10) அருள் நிறைந்த....

06. இன்று ஆண்டவராகிய மெசியா என்னும் மீட்பர் உங்களுக்காக தாவீ தின் ஊரில் பிறந்திருக்கிறார். (லூக். 2:10) அருள் நிறைந்த....

07. "உன்னதத்தில் கடவுளுக்கு மாட்சி உரித்தாகுக!, உலகில் அவருக்கு உகந்தோருக்கு அமைதி உண்டாகுக" (லூக். 2:14) அருள் நிறைந்த....

08. கிழக்கில் இருந்து ஞானிகள் எருசலேமுக்கு வந்து குழந்தையை அதன் தாய் மரியா வைத்திருப்பதைக் காண்பார்கள். (மத். 2:01,11) அருள்.....

09. நெஞ்சாண்கிடையாய் விழுந்து குழந்தையை வணங்கினார்கள். பொன் னும், சாம்பிராணியும், வெள்ளைப் போலமும் காணிக்கையாகக் கொடுத்தார்கள். (மத். 2:11) அருள் நிறைந்த....

10. மரியா இந்நிகழ்ச்சிகளை எல்லாம் தம் உளள்ளத்தில் இருத்திச் சிந் தித்துக் கொண்டிருந்தாள். (லூக். 2:19) அருள் நிறைந்த....

பிதாவுக்கும் சுதனுக்கும்.../ஓ என் இயேசுவே...!

**(ஈ) இயேசுவைக் கோவிலில் காணிக்கையாக ஒப்புக்கொடுத்ததைத் தியானித்து நாம் இறைதிருவுளத்திற்குப் பணிந்து நடக்கும் வரம் கேட்போமாக. (லூக். 2:22-40) (கர்த்தர் கற்பித்த செபம்)**

01. மோசே சட்டப்படி தூய்மைச் சடங்கை நிறைவேற்றிய நாள் வந்தபோது குழந்தையை எருசலேமுக்கு கொண்டு போனார்கள். (லூக். 2:22) அருள்....

02. எருசலேமில் சிமியோன் என்னும் ஒருவர் இருந்தார். அவர் நேர்மை யானவர்; இறைபற்றுக் கொண்டவர். (லூக். 2:25) அருள் நிறைந்த....

03. "ஆண்டவருடைய மெசியாவைக் காணுமுன், அவர் சாகப் போவ தில்லை" என்று தூய ஆவியால் உணர்த்தப்பட்டிருந்தார். (லூக்.2:26) அருள்....

04. குழந்தையை அதன் பெற்றோர் கொண்டு வந்தபோதுசிமியோன் குழந் தையைக் கையில் ஏந்தி கடவுளைப் போற்றினார். (லூக். 2:27-28) அருள்....

05. "ஆண்டவரே உமது சொற்படி உம் அடியான் என்னை அமைதியுடன் போகச் செய்யும்" (லூக். 2:29) அருள் நிறைந்த....

06, "மக்கள் அனைவரும் காணுமாறு நீர் ஏற்பாடு செய்துள்ள உமது மீட்பை, என் கண்கள் கண்டு கொண்டன" (லூக். 2:31) அருள் நிறைந்த....

07. இம் மீட்பே பிற இனத்தாருக்கு வெளிப்பாடு அருளும் ஒளி இதுவே உம் மக்களாகிய இஸ்ரயேலுக்குப் பெருமை. (லூக். 2:32) அருள் நிறைந்த....

08. சிமியோன் மரியாவை நோக்கி "இதோ இக்குழந்தை இஸ்ரயேல் மக் களுள் பலரின் வீழ்ச்சிக்கும் எழுச்சிக்கும் காரணமாக இருக்கும் எதிர்க்கப்படும் அடையாளமாகவும் இருக்கும். (லூக். 2:34) அருள் நிறைந்த....

09. பலருடைய இறைவான எண்ணங்கள் வெளிப்படும் உமது உள்ளத்தை யும் ஒரு வாள் ஊடுருவிப் பாயும். (லூக். 2:35) அருள் நிறைந்த....

10. அவர்கள் நாசரேத்துக்குத் திரும்பிப் போனார்கள். குழந்தையும் வளர்ந்து (லூக். 2:39-40) அருள் நிறைந்த....

**(உ) காணாமற்போன இயேசுவைக் கண்டடைந்ததைத் தியானித்து நாம் இயேசுவைஎன்றும் தாகத்தோடு தேடும் வரம்கேட்டுச் செபிப்போமாக. (லூக். 2:42-45) (கர்த்தர் கற்பித்த செபம்)**

01. இயேசுவுக்கு பன்னிரண்டு வயது ஆனபோது பாஸ்கா விழாவைக் கொண்டாட எருசலேம் சென்றனர். (லூக். 2:42-41A) அருள் நிறைந்த....

02. விழாநாட்கள் முடிந்து அவர்கள் திரும்பிய பொழுது, சிறுவன் இயேசு எருசலேமிர் தங்கிவிட்டார். இது அவருடைய பெற்றோர்க்குத் தெரியாது. (லூக். 2:43) அருள் நிறைந்த....

03. அவரைக் காணாததால் அவரைத் தேடிக்கொண்டு எருசலேமுக்குத் திரும்பிச் சென்றார்கள். மூன்று நாள்களுக்குப் பின் அவரைக் கோவிலில் கண்டார்கள். (லூக். 2:45-46A) அருள் நிறைந்த....

04. அங்கே அவர் போதகர்கள் நடுவில் அமர்ந்து அவர்கள் சொல்வதைக் கேட்டுக்கொண்டும் அவர்களிடம் கேள்விகளை எழுப்பிக்கொண்டுமிருந்தார். (லூக். 2:46B) அருள் நிறைந்த....

05. அனைவரும் அவருடைய புரிந்துகொள்ளும் திறனையும் அவர் அளித்த பதிலையும் கண்டு மலைத்துப் போயினர். (லூக். 2:47) அருள் நிறைந்த....

06. "மகனே, ஏன் இப்படிச் செய்தாய்? இதோ பார், உன் தந்தையும் நானும் உன்னை மிகுந்த கவலையோடு தேடிக்கொண்டிருந்தோமே. (லூக். 2:48) அருள் நிறைந்த....

07. "நீங்கள் ஏன் என்னைத் தேடுனீர்கள்? நான் என் தந்தையின் அலு வல்களில் ஈடுபட்டிருக்க வேண்டும் என்பது உங்களுக்குத் தெரியாதா?" என் றார். (லூக். 2:49) அருள் நிறைந்த....

08. அவர் சொன்னதை அவர்கள் புரிந்துகொள்ளவில்லை. (லூக். 2:50) அருள் நிறைந்த....

09. பின்பு அவர் அவர்களுடன் சென்று நசரேத்தை அடைந்து அவர்களுக்குப் பணிந்து நடந்தார். (லூக். 2:51) அருள் நிறைந்த....

10. இயேசு ஞானத்திலும் உடல் வளர்ச்சியிலும் மிகுந்து கடவுளுக்கும் மனிதருக்கும் உகந்தவராய் வாழ்ந்து வந்தார். (லூக். 2:52) அருள் நிறைந்த....

**துயர் நிறை மறையுண்மைகள்**

**(அ) இயேசு கெத்சமனித் தோட்டத்தில் இரத்த வியர்வை சிந்தியதைத் தியானித்து நம் பாவங்களுக்காக நாம் மனத்துயர் அடையச் செபிப்போமாக. (கர்த்தர் கற்பித்த செபம்)**

01. இயேசு சீடர்களுடன் கெத்சமனி என்னும் இடத்திற்கு வந்தார். அங்கே போய் இறைவனிடம் வேண்டும்வரை இங்கே அமர்ந்திருங்கள் எனக்கூறி பேதுருவையும் செபதேயுவின் மக்கள் இருவரையும் தம்முடன் அழைத்துச் சென்றார். (மத். 26-36) அருள் நிறைந்த....

02. "எனது உள்ளம் சாவு வருமளவுக்கு ஆழ்துயரம் கொண்டுள்ளது. நீங்கள் என்னோடு இங்கேயே தங்கி விழித்திருங்கள்" என்று அவர்களிடம் கூறினார். (மத். 26-38) அருள் நிறைந்த....

03. பின்பு அவர் அவர்களை விட்டு கல்லெறி தூரம் விலகிச்சென்று முழந்தாள் படியிட்டு இறைவனிடம் வேண்டினார். (லூ. 22-41) அருள் நிறைந்த....

04. "என் தந்தையே முடிந்தால் இத்துன்பக் கிண்ணம் என்னைவிட்டு அகலட்டும். ஆனாலும் என் விருப்பப்படியல்ல, உம் விருப்பப்படியே நிகழட்டும்" (மத். 26-39B) அருள் நிறைந்த....

05. அப்போது விண்ணகத்தில் இருந்து ஒரு தூதர் அவருக்குத் தோன்றி அவரை வலுப்படுத்தினார். (லூக். 22-43) அருள் நிறைந்த....

06. அவரோ மிகுந்த வேதனைக்குள்ளாகவே உருக்கமாய் இறைவனிடம் வேண்டிக்கொண்டிருந்தார். (லூக். 22-44A) அருள் நிறைந்த....

07. அவரது வியர்வை பெரும் இரத்தத்துளிகளைப் போலத் தரையில் விழுந்தது. (லூக். 22-44B) அருள் நிறைந்த....

08. அவர் சீடர்களிடம் வந்து அவர்கள் உறங்கிக்கொண்டிருப்பதைக்கண்டு பேதுருவிடம், "ஒருமணி நேரம் கூட என்னோடு விழித்திருக்க வலுவில்லையா." (மத். 26-40) அருள் நிறைந்த....

09. "சோதனைக்கு உட்படாதிருக்க விழித்திருந்து இறைவனிடம் வேண் டுங்கள்" (லூக். 22-46) அருள் நிறைந்த....

10. "மனம் ஆர்வம் உள்ளது தான்; ஆனால் உடலோ வலுவற்றது" என் றார். (மத். 26-41) அருள் நிறைந்த....

பிதாவுக்கும் சுதனுக்கும்.../ஓ, என் இயேசுவே...!

**(ஆ) இயேசு கற்றூனில் கட்டுண்டு அடிக்கப்பட்டதைத் தியானித்து, நம் புலன்களை அடக்கி வாழும் வரம் கேட்டுச் செபிப்போமாக. (கர்த்தர் கற்பித்த செபம்)**

01. இயேசுவைக் கட்டி இழுத்துச் சென்று பிலாத்திடம் ஒப்புவித்தனர். பிலாத்து அவரை நோக்கி "நீ யூதரின் அரசனா?" என்று வினவினான். (மாற். 15:1-2) அருள் நிறைந்த....

02. இயேசு மறுமொழியாக "எனது ஆட்சி இவ்வுலக ஆட்சி போன்றது அல்ல, அரசன் என்று நீர் சொல்கிறீர் (யோவா. 18-36-37A) அருள் நிறைந்த....

03. உண்மையை எடுத்துரைப்பதே என்பணி. இதற்காகவே நான் பிறந்தேன்; இதற்காகவே உலகிற்கு வந்தேன்; உண்மையைச் சார்ந்தவர் அனைவரும் என் குரலுக்குச் செவிசாய்க்கின்றனர். (யோவா. 18-37B) அருள் நிறைந்த....

04. பிலாத்து அவரிடம் "உண்மையா அது என்ன?" என்று கேட்டபின் யூதரிடம் சென்று "இவனிடம் நான் குற்றம் ஒன்றும் காணவில்லையே" என்றான். (யோ. 18:38) அருள் நிறைந்த....

05. "எனவே இவனைத் தண்டித்து விடுதலை செய்வேன்" என்றான். பின்னர் பிலாத்து இயேசுவைச் சாட்டையால் அடிக்கச் செய்தான். (லூக்: 23-16, யோ. 19:1) அருள் நிறைந்த....

06. அவர் இகழப்பட்டார்; மனிதரால் புறக்கணிக்கப் பட்டார்; வேதனையுற்ற மனிதராய் இருந்தார். (எசா. 53:3) அருள் நிறைந்த....

07. அவர் ஒடுக்கப்பட்டார்; சிறுமைப்படுத்தப்பட்டார்; அடிப்பதற்காக இழுத்துச் செல்லப்பட்ட கத்தாத செம்மறி போலும் அவர் தம் வாயைத் திறவாதிருந்தார். (எசா. 53:7) அருள் நிறைந்த....

08. அவரது முகத்தை மூடி "உன்னை அடித்தவர் யார்? இறைவாக்கினனே சொல்" என்று கேட்டார்கள். (லூக். 22:64) அருள் நிறைந்த....

09. அவரோ நம் குற்றங்களுக்காகக் காயமடைந்தார் நம் தீச் செயல்க ளுக்காக நொறுக்கப்பட்டார். (எசா. 53:5A) அருள்....

10. நமக்கு நிறைவாழ்வை அளிக்க அவர் தண்டிக்கப்பட்டார் அவர் தம் காயங்களால் நாம் குணமடைந்தோம் (எசா. 53:5B) அருள்....

(தொடர்ச்சி 7ஆம் பக்கம்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வணக்க மாதத்தில் சொல்ல....

## ஆம் பக்கத் தொடர்ச்சி

(இ) இயேசுவுக்கு முள்முடி தரித்ததைத் தியானித்து, நம்மையே ஒதுக்கவும், நமக்கு நேரிடும் நிந்தை அவமானங்களையும் தோல்விகளையும் ஏற்கவும் செபிப்போமாக. (கர்த்தர் கற்பித்த செபம்)

01. பின்னர் படைவீரர் அவரை இழுத்துக்கொண்டு போய் படைப் பிரிவினர் அனைவரையும் கூட்டி, அவருக்கு செந்நிற ஆடையை உடுத்தினர். (மாற். 15:16) அருள் நிறைந்த......

02. "யூதரின் அரசே வாழ்க!" என்று அவரை வாழ்த்தத் தொடங்கினர். (மாற். 15:18) அருள்......

03. அவர்கள் ஒரு முள்முடி பின்னி அவரது தலையின் மேல் வைத்து அவருடைய வலக்கையில் ஒரு கோலையும் கொடுத்தனர். (மத். 27:29) அருள் நிறைந்த......

04. அவர் மேல் துப்பி, அக்கோலை எடுத்து அவருடைய தலையில் அடித்தனர். (மத். 27:30) அருள் நிறைந்த......

05. அவரைக் கண்ட பலர் திகைப்புற்றனர். அவரது தோற்றம் பெரிதும் உருக்குலைந்ததால் மனித சாயலே அவருக்கு இல்லாதிருந்தது. (எசா. 52: 14) அருள் நிறைந்த......

06. அவரை நொறுக்கவும், நோயால் வதைக்கவும் ஆண்டவர் திருவுளம் கொண்டார். அவர் தம் துன்பவாழ்வின் பயனைக் கண்டு நிறைவடைவார். (எசா. 53:10-11A) அருள் நிறைந்த......

07. இயேசு முள்முடியும் செந்நிற மேலுடையும் அணிந்தவராய் வெளியே வந்தார். (யோவா. 19:5) அருள் நிறைந்த......

08. பிலாத்து யூதர்களிடம் "இதோ உங்கள் அரசன்" என்றான். அவர்கள் "ஒழிக! ஒழிக! அவனைச் சிலுவையில் அறையும்" என்று கத்தினார்கள். (யோவா. 19:14B-15) அருள் நிறைந்த......

09. அதற்குப் பிலாத்து "இவன் செய்த குற்றமென்ன?" என்று கேட்க அவர்கள் "அவனைச் சிலுவையில் அறையும்" என்று இன்னும் உரக்கக் கத்தினார்கள். (மாற். 15:14) அருள் நிறைந்த......

10. ஆகவே பிலாத்து கூட்டத்தினரின் விருப்பத்தை நிறைவேற்றும் வண்ணம் இயேசுவைக் கசையால் அடித்து சிலுவையில் அறையுமாறு ஒப்புவித்தான். (மாற். 15:15) அருள் நிறைந்த......

(ஈ) இயேசு சிலுவை சுமந்து சென்றதைத் தியானித்து, வாழ்க்கைச் சுமைகளை பொறுமையோடு ஏற்றுவாழச் செபிப்போமாக (கர்த்தர் கற்பித்த செபம்)

01. அவரை ஏளனம் செய்தபின் செந்நிற ஆடையைக் கழற்றிவிட்டு அவருடைய ஆடைகளை அணிவித்து அவரைச் சிலுவையில் அறைவதற்காக வெளியே கூட்டிச் சென்றனர். (மாற்.15:20) அருள்......

02. மெய்யாகவே அவர் தம் பிணிகளைத் தாங்கிக் கொண்டார். நம் துன்பங்களைச் சுமந்துகொண்டார். (எசா. 53:4) அருள் நிறைந்த......

03. இயேசு சிலுவையைத் தாமே சுமந்துகொண்டு "மண்டையோட்டு இடம்" என்னுமிடத்திற்குச் சென்றார். (யோ. 19:17) அருள் நிறைந்த......

04. சீரேன் ஊரைச்சேர்ந்த சீமோன் என்பவரைப் பிடித்து, அவர்மேல் இயேசுவின் சிலுவையைவைத்து அவருக்குப் பின் அதைச் சுமந்துகொண்டு போகச் செய்தார்கள். (லூக். 23:26) அருள் நிறைந்த......

05. பெருஞ்சுமை சுமந்து சோர்ந்திருப்பவர்களே! எல்லோரும் என்னிடம் வாருங்கள். நான் உங்களுக்கு இளைப்பாறுதல் தருவேன். (மத்.11-28) அருள் நிறைந்த....

06. நான் கனிவும் மனத்தாழ்மையும் உடையவன். (மத். 11:29A) அருள்.....

07. உங்கள் உள்ளத்திற்கு இளைப்பாறுதல் கிடைக்கும். என் நுகம் அழுத்தாது; என் சுமை எளிதாய் உள்ளது. (மத். 11-29B-30) அருள் நிறைந்த......

08. பெருந்திரளான மக்களும் அவருக்காக மாரடித்துப் புலம்பி ஒப்பாரி வைத்த பெண்களும் அவர் பின்னே சென்றார்கள். (லூ. 23:27) அருள்......

09. இயேசு அப்பெண்கள் பக்கம் திரும்பி, எருசலேம் மகளிரே!, நீங்கள் எனக்காக அழவேண்டாம், மாறாக உங்களுக்காகவும், உங்கள் மக்களுக்காகவும் அழுங்கள். (லூக். 23:28) அருள் நிறைந்த......

10. பச்சை மரத்திற்கே இவ்வாறு செய்கிறார்கள் என்றால் பட்ட மரத்திற்கு என்னதான் செய்யமாட்டார்கள். (லூக். 23:31) அருள் நிறைந்த......

பிதாவுக்கும் சுதனுக்கும்.......ஓ என் இயேசுவே.....!

(உ) இயேசு சிலுவையில் அறையப்பட்டு உயிர்விட்டதைத் தியானித்து நாம் இயேசுவை அன்பு செய்யவும், பிறரை மன்னிக்கவும் செபிப்போமாக. (கர்த்தர் கற்பித்த செபம்)

01. பிலாத்து அவரைச் சிலுவையில் அறையுமாறு அவர்களிடம் ஒப்புவித்தான்(யோ.19:16)அருள்......

02. "மண்டையோட்டிடம்" என்று பொருள்படும் 'கொல்கொதாவுக்கு' வந்தார்கள். (மத். 27:33) அருள் நிறைந்த......

03. அவர்கள் அவரைச் சிலுவையில் அறைந்த பின்பு குலுக்கல் முறையில் அவருடைய ஆடைகளைப் பங்கிட்டுக் கொண்டார்கள். (மத், 27:35) அருள்......

04. அவரது தலைக்குமேல் "இவன் யூதர்களின் அரசனாகிய இயேசு" என்று எழுதப்பட்டிருந்தது. (மத். 27:37) அருள் நிறைந்த......

05. அதன்பின் அவருடைய வலப்புறம் ஒருவனும் இடப்புறம் ஒருவனுமாக இரு கள்வர்களை சிலுவையில் அறைந்தார்கள்.

06. இயேசு தந்தையே இவர்களை மன்னியும், ஏனெனில் தாங்கள் செய்வது என்னவென்று இவர்களுக்குத் தெரியவில்லை. (லூக். 23:34) அருள் நிறைந்த......

07. இயேசு தம் தாயிடம் "அம்மா இவரே உம் மகன்" என்றார். (யோ. 19:26) அருள்......

08. பின்னர் தம் சீடரிடம் "இவரே உம் தாய்" என்றார். அந்நேரம் முதல் அச்சீடர் அவரைத் தம் வீட்டில் ஏற்று ஆதரவு அளித்து வந்தார். (யோ. 19:27) அருள் நிறைந்த......

09. "தந்தையே, உம் கையில் என் உயிரை ஒப்படைக்கிறேன்" என்று இயேசு உரத்த குரலில் கூறி உயிர்துறந்தார். (லூக். 23:46) அருள் நிறைந்த......

10. இயேசு "எல்லாம் நிறைவேறிற்று" என்று கூறித் தலைசாய்த்து ஆவியை ஒப்படைத்தார். (யோ. 19:30) அருள் நிறைந்த......

பிதாவுக்கும் சுதனுக்கும்....../ஓ என் இயேசுவே....!

### மகிமை நிறை மறையுண்மைகள்

(அ) இயேசு உயிர்த்தெழுந்ததைத் தியானித்து, நாம் மனம் மாறிடவும் உயிர்த்துடிப்புள்ள விசுவாசத்துடன் வாழவும் செபிப்போமாக. (கர்த்தர் கற்பித்த செபம்)

01. உறுதியாக உங்களுக்குச் சொல்கிறேன். நீங்கள் அழுவீர்கள், புலம்புவீர்கள் அப்போது உலகம் மகிழும். நீங்கள் துயர் கூறுவீர்கள் ஆனால் உங்கள் துயரம் மகிழ்ச்சியாக மாறும். (யோ. 16:20) அருள் நிறைந்த......

02. ஆனால் நான் உங்களை மீண்டும் காணும்போது உங்கள் உள்ளம் மகிழ்ச்சி அடையும். உங்கள் மகிழ்ச்சியை யாரும் உங்களிடமிருந்து நீக்கிவிட முடியாது. (யோ. 16:22) அருள் நிறைந்த......

03. வாரத்தின் முதல் விடியற்காலையிலேயே தாங்கள் ஆயத்தம் செய்திருந்த நறுமணப்பொருட்களை எடுத்துக்கொண்டு அப்பெண்கள் கல்லறைக்குச் சென்றார்கள். (லூக். 24:1) அருள் நிறைந்த......

04. திடீரென ஒரு பெரிய நில நடுக்கம் ஏற்பட்டது. ஆண்டவரின் தூதர் விண்ணிலிருந்து இறங்கி வந்து கல்லறையை மூடியிருந்த கல்லைப் புரட்டி அதன்மேல் உட்கார்ந்தார். (மத். 28:2) அருள்.....

05. அவர் அவர்களிடம் "திகிலுற வேண்டாம், சிலுவையில் அறையப்பட்ட நாசரேத்து இயேசுவைத் தேடுகிறீர்கள். அவர் உயிருடன் எழுப்பப்பட்டார். அவர் இங்கே இல்லை. (மாற். 16:6) அருள்......

06. கலிலேயாவில் இருக்கும்போது அவர் உங்களுக்குச் சொன்னதை நினைவுபடுத்திக் கொள்ளுங்கள். (லூக். 24:6) அருள் நிறைந்த......

07. நீங்கள் விரைந்துசென்று, "இறந்த அவர் உயிருடன் எழுப்பப்பட்டார் எனச் சீடருக்குக் கூறுங்கள்." (மத். 28:7) அருள் நிறைந்த......

08. கல்லறைவிட்டுத் திரும்பிப் போய் இவை அனைத்தையும் பதினொருவருக்கும் மற்ற அனைவருக்கும் அறிவித்தார்கள். (லூக். 24:9) அருள்......

09. "உயிர்த்தெழுதலும் வாழ்வும் நானே, என்னிடம் நம்பிக்கை கொள்பவர் இறப்பினும் வாழ்வார்." (யோ. 11:25) அருள் நிறைந்த......

10. உயிரோடு இருக்கும்போது என்னிடம் நம்பிக்கைகொள்ளும் எவரும் என்றுமே சாகமாட்டார். (யோ. 11:26) அருள் நிறைந்த......

பிதாவுக்கும் சுதனுக்கும்......./ஓ என் இயேசுவே....!

(ஆ) இயேசுவின் விண்ணேற்றத்தைத் தியானித்து நாம் இறைவனில் நம்பிக்கை கொண்டு விண்ணக வாழ்வைத் தேடும் வரம் கேட்டு செபிப்போமாக.

(கர்த்தர் கற்பித்த செபம்)

01. இயேசு பெதானியா வரை அவர்களை அழைத்துச் சென்று கைகளை உயர்த்தி அவர்களுக்கு ஆசி வழங்கினார். (லூக். 24:50) அருள் நிறைந்த......

02. இயேசு அவர்களை அணுகி "விண்ணுலகிலும் மண்ணுலகிலும் அனைத்து அதிகாரமும் எனக்கு அருளப்பட்டிருக்கிறது. (மத். 28:18) அருள்......

03. நீங்கள் போய் எல்லா மக்களினத்தாரையும் சீடராக்குங்கள். (மத். 28:19அ) அருள் நிறைந்த......

04. தந்தை, மகன், தூய ஆவியார் பெயரால் திருமுழுக்குக் கொடுங்கள். (மத். 28:19B) அருள் நிறைந்த ......

05. நம்பிக்கை கொண்டு திருமுழுக்குப் பெறுவோர் மீட்புப்பெறுவர். (மாற். 16:16A) அருள்.....

06. நம்பிக்கையற்றவரோ தண்டனைத் தீர்ப்புப் பெறுவர். (மாற். 16:16B) அருள் நிறைந்த......

07. நான் உங்களுக்கு கட்டளையிட்ட யாவையும் அவர்களும் கடைப்பிடிக்கும்படி கற்பியுங்கள்இதோ! உலக முடிவுவரை எந்நாளும் நான் உங்களுடன் இருக்கிறேன். (மத். 28:20) அருள் நிறைந்த......

08. தூய ஆவி உங்களிடம் வரும்போது நீங்கள் கடவுளது வல்லமையைப் பெற்று உலகின் கடைவெல்லை வரை வரைக்கும் எனக்குச் சாட்சிகளாய் இருப்பீர்கள். (தி.ப. 1:8) அருள் நிறைந்த......

09. இவற்றைச் சொன்ன பின்பு அவர்கள் கண்கள் முன்பாக அவர்மேலே எடுத்துக் கொள்ளப்பட்டார். மேகம் ஒன்று அவரை எடுத்துச் சென்று அவர்கள் பார்வையிலிருந்து மறைத்துவிட்டது. (தி.ப. 1:9) அருள் நிறைந்த......

10. ஆண்டவர் இயேசு விண்ணேற்றம் அடைந்து கடவுளின் வலப்புறம் அமர்ந்தார். (மாற். 16:19) அருள் நிறைந்த......

பிதாவுக்கும் சுதனுக்கும்......./ஓ என் இயேசுவே....!

(இ) தூய ஆவி தேவ அன்னை மீதும், திருத்தூதர்கள் மீதும் இறங்கி வந்ததைத் தியானித்து நாம் அனைவரும் தூய ஆவியின் கொடைகளைப் பெற செபிப்போமாக. (கர்த்தர் கற்பித்த செபம்)

01. பெந்தக்கோஸ்து எனும் நாள் வந்தபோது அவர்கள் எல்லோரும் ஒரே இடத்தில் கூடியிருந்தார்கள். (தி.து.ப. 2:1) அருள் நிறைந்த......

02. திடீரென்று கொடுங்காற்று வீசுவது போன்று ஓர் இரைச்சல் வானத்திலிருந்து உண்டாகி அவர்கள் அமர்ந்திருந்த வீடு முழுவதும் ஒலித்தது. (தி.து.ப. 2:2) அருள் நிறைந்த......

03. மேலும் நெருப்புப் போன்ற பிளவுற்ற நாவுகள் ஒவ்வொருவர் மேலும் வந்தமர்ந்ததை அவர்கள் கண்டார்கள். (தி.து.ப. 2:3) அருள் நிறைந்த......

04. அவர்கள் அனைவரும் தூயஆவியால் ஆட்கொள்ளப்பட்டனர். தூய ஆவியின் தூண்டுதலால் அவர்கள் ஒவ்வொருவரும் வெவ்வேறான மொழிகளில் பேசத் தொடங்கினார்கள். (தி.து.ப. 2:4) அருள்......

05. அப்பொழு வானத்தின் கீழ் உள்ள அனைத்து நாடுகளிலிருந்தும் வந்திருந்த இறைபற்றுள்ள யூத மக்கள் எருசலேமில் தங்கி இருந்தனர். (தி.து.ப. 2:5) அருள் நிறைந்த......

06. அப்பொழுது பேதுரு பதினொருவரடன் சேர்ந்து, எழுந்துநின்று உரத்த குரலில் பேசினார். (தி: து.ப. 2:14) அருள் நிறைந்த......

07. "நீங்கள் மனம் மாறுங்கள். உங்கள் பாவங்களிலிருந்து மன்னிப்புப் பெறுவதற்காக ஒவ்வொருவரும் இயேசுக் கிறிஸ்துவின் பெயரால் திருமுழுக்கு பெறுங்கள் அப்பொழுது தூய ஆவியைக் கொடையாகப் பெறுவீர்கள். (தி.து.ப. 2:8) அருள் நிறைந்த......

08. அவருடைய வார்த்தைகளை ஏற்றுக்கொண்டவர்கள் திருமுழுக்குப் பெற்றார்கள். அன்று ஏறக்குறைய மூவாயிரம் போர் அவர்களோடு சேர்க்கப் பட்டனர். (தி.து.ப. 2:41) அருள் நிறைந்த......

09. அவர்கள் திருத்தூதர் கற்பித்தவற்றிலும், நட்புறவிலும், அப்பம் பிட்டுவதிலும், இறைவேண்டலிலும் உறுதியாய் நிலைத்திருந்தார்கள். (தி.து.ப. 42) அருள் நிறைந்த......

10. வருக! தூய ஆவியே! எம் விசுவாசிகளின் இதயங்களை நிரப்பும் அவர்களில் உம் அன்பின் கதிர்களைப் பற்றியெரியச் செய்யும். அருள்......

(ஈ) தேவஅன்னை தம் ஆத்ம சரீரத்தோடு பரலோகத்திற்கு எழுந்தருளிப் போனதைத் தியானித்து நாமும் விண்ணக மகிமையில் பங்குபெறச் செபிப்போமாக. (கர்த்தர் கற்பித்த செபம்)

01. எழுந்திடு என் அன்பே, என் அழகே விரைந்துவா" (இ.பா. 2.10) அருள் நிறைந்த......

02. இதோ கார்காலம் கடந்துவிட்டது மழையும் பெய்து ஓய்ந்துவிட்டது. (இ.பா. 2:11) அருள் நிறைந்த......

03. காட்டிடு எனக்கு உன் முகத்தை; எழுப்பிடு நான் கேட்க உன் குரலை; உன் குரல் இனிது; உன் முகம் எழிலே; (இ.பா. 2:14) அருள்....

04. அப்பொழுது விண்ணகத்தில் கடவுளின் கோவில் திறக்கப்பட்டது. மின்னலும் பேரிரைச்சலும் இடிமுழக்கமும் நிலநடுக்கமும் கனத்த கல் மழையும் உண்டாயின. (தி.வெ. 11:19) அருள் நிறைந்த......

05. வானில் பெரியதோர் அடையாளம் தோன்றியது பெண் ஒருவர் காணப் பட்டார் அவர் கதிரவனை ஆடையாக அணிந்திருந்தார். (தி.வெ.121A) அருள்......

06. நிலா அவருடைய காலடியில் இருந்தது அவர் பன்னிரு விண்மீன்களைத் தலைமீது சூட்டி இருந்தார். (தி.வெ. 12:13) அருள் நிறைந்த......

07. அருமைமிகு அரசின மகளிர் உம்மை எதிர்கொள்வார். ஓபிரின் பொன் அணிந்து வடிவாக வலப்புறம் நிற்கின்றாள் பட்டத்தரசி. (தி.பா. 45:09) அருள்......

08. "மகளே, உலகில் உள்ள எல்லாப் பெண்களையும் விட நீ உன்னத கடவுளின் ஆசி பெற்றவள். (யூதி. 13:18) அருள் நிறைந்த......

09. நம் கடவுள் திருமுன் நேர்மையாக நடந்து நமக்கு வரவிருந்த பேரழிவைத் தடுத்துவிட்டாய். (யூத. 13:20B) அருள் நிறைந்த......

10. "நீரே எருசலேமின் மேன்மை; நீரே இஸ்ரேயலின் பெரும்மாட்சி. நம் இனத்தாரின் உயர் பெருமை நீரே. (யூதி. 15:9) அருள் நிறைந்த......

பிதா சுதன் பரிசுத்த...../ஓ என் இயேசுவே....!

(உ) தேவ அன்னை விண்ணக மண்ணக மரசியாக மணிமுடி சூட்டப் பெற்றதைத் தியா னித்து நாம் அன்னை மரியாவின் மீது ஆழ்ந்த பக்தி கொள்ளச் செபிப்போமாக. (கர்த்தர் கற்பித்த செபம்)

01. வைகறைபோல் தோற்றம்; திங்களைப்போல் அழகு; ஞாயிறுபோல் ஒளி; போரணி போல் வியப்பார்வம். (யூதி. 6:10) அருள் நிறைந்த......

02. உன்னத இறைவனின் கோவிலுக்கு மேல் ஒளிரும் கதிரவன் போலவும் மாட்சி மிகு முகில்கள் பளிச்சிடும் வானவில் போலவும் காணப்பட்டார். (சீ.ஞா. 50:7) அருள் நிறைந்த......

03. சாரோன் சமவெளியில் உள்ள காட்டுமலர்; நான் பள்ளத்தாக்குகளில் காணும் லீலிமலர். (இ.பா. 2:1) அருள் நிறைந்த......

04. காலத்திற்கு முன்பே தொடக்கத்தில் அவர் என்னைப் படைத்தார், எக்காலமும் நான் வாழ்த்திடுவேன். (சீ.ஞா. 24:9) அருள் நிறைந்த......

05. நான் அழகு அளித்திடும் திராட்சைக்கொடி, மாட்சி, செல்வத்தினுடைய கனிகள். என் மலர்கள். (சீ.ஞா. 24:17) அருள் நிறைந்த......

06. மணமகள் அணியுமாறு பளபளப்பான தூய்மையான விலைஉயர்ந்த மெல்லிய ஆடை அவருக்கு அளிக்கப்பட்டது. அந்த ஆடை இறைமக்களின் நீதிச்செயல்களே. (தி.வெ. 19:8) அருள் நிறைந்த......

07. எனவே பிள்ளைகளே எனக்குச் செவி கொடுங்கள். என் விழிகளைப் பின்பற்றுகின்றோர் நற்பேறு பெற்றோர். (நீ.மொ. 8:32) அருள் நிறைந்த......

08. என்னைத் தேடி அடைவோர் வாழ்வடைவர்; ஆண்டவரின் கருணை அவர்களுக்குக் கிடைக்கும். (நீ.மொ. 8:35) அருள் நிறைந்த......

09. ஆண்டவரிடம் அச்சம் கொள்ளுதலே; ஞானத்தின் தொடக்கம் அது இறைபற்றுள்ளோருக்கு தாய் வயிற்றிலிருக்கும் பொழுதே வழங்கப்பெறுகிறது. (சீராக் 1:14) அருள் நிறைந்த......

10. இரக்கத்தின் அரசியே! வாழி எதிரிகளிடமிருந்து எம்மைக் காத்திடுவீர் எம் மரணத்தருவாயில் உம்மிடம் எம்மை அழைத்திடுவீர்.

பிதாவுக்கும் சுதனுக்கும்....../ஓ என் இயேசுவே....!

அர்ப்பணப் பூக்கள் (வேதியர் கையேடு)

தொகுப்பு :சூ. மரியநாயகம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மறைந்த மேரி பஸ்ரியன் அடிகளாரின் குருத்துவ நினைவுத் திருப்பலி

25.04.2000 அன்று இளவாலை புனித அன்னம்மாள் ஆலயத்தில் மறைந்த பங்கு மகனான அருள்திரு மேரி பஸ்ரியனின் குருத்துவ நினைவுத் திருப்பலி பங்கு மக்களால் ஒப்புக்கொடுக்கப்பட்டது.

மேரி பஸ்ரியன் அடிகளார் 25.04.1975 இல் குருவாகத் திருநிலைப்படுத்தப்பட்டு 25 ஆண்டுகள் நிறைவுறுவதை நினைவுகூர்ந்தே மேற்படி திருப்பலி ஒப்புக்கொடுக்கப் பட்டது. இவரோடு கூட குருவாகத் திருநிலைப்படுத்தப் பட்ட மன்னார் மறை மாவட்டத்தைச் சேர்ந்த கிறிஸ்டியன் வாஸ் அடிகளாரும், பயஸ் இருதயதாஸ் அடிகளாரும் தமது குருத்துவத்தின் வெள்ளி விழாவினை இவ் வருடம் கொண்டாடுவது தெரிந்ததே.

மேரி பஸ்ரியன் அடிகளார் மன்னார், மடு, மானிப்பாய், வங்காலை ஆகிய பங்குகளில் பணிபுரிந்தவர். வங்காலையில் பணிபுரியும்போது 06.01.85இல் சுட்டுக்கொல்லப்பட்டவர் என்பது குறிப்பிடத்தக்கது.

## 34ஆவது உலகத் தொடர்பு தினம் ~ யூபிலி பத்திரிகையாளர் தினம் (யூன் 4)

# ''நற்செய்தி அறிவிப்பிற்கு நவீன சாதனங்களையும் பயன்டுத்துங்கள்'' – திருத்தந்தை 2ஆம் அருளப்பர் சின்னப்பர்

"புதிய மிலேனியத்தின் விடியலில் கிறிஸ்துவை அறிவிப்பது" என்பது திருத்தந்தை 2ஆம் அருள் சின்னப்பர் விடுத்த செய்தியின் கருப்பொருளாக அமைந்துள்ளது.

அன்று அப்போஸ்தலர் கிறிஸ்துவின் கட்டளைப்படி நற்செய்தி அறிவிக்கும் கடமை உண்டு. 2000 ஆண்டுகளில் சூழ்நிலைகள் பெரிதும் மாற்றமடைந்திருந்த போதிலும் கிறிஸ்துவை அறிவிக்க வேண்டிய தேவை இன்னும் உள்ளது.

அப்போஸ்தலர் கையாண்ட நேரடியான அறிவிப்புமுறை இன்னும் அத்தியாவசியமாக இருக்கின்றது. ஆனால் இறைவார்த்தையைப் பரப்பும் பாரம் பரிய முறைகளுடன், நவீன தொடர்புசாதனங்களில் காணப்படும். வழிவகைகளையும் வாய்ப்புகளையும் திருச்சபை பயன்படுத்திக் கொள்ளவேண்டும்.

நவீன சாதனங்களின் மூலம் தகவல்களும் கருத்துகளும், மதிப்பீடுகளும் சதா. பரிமாறிக் கொள்ளப்படுகின்றன. அவற்றின் மூலம் தாம் வாழும் உலகு பற்றிய அபிப்பிராயங்களை உருவாக்கி, வாழ்வின் அர்த்தம் பற்றிய விளக்கத்தையும் பெற்றுக்கொள்கின்றனர். கிறிஸ்துவை அறிவிப்பது இந்த வாழ்க்கை அனுபவத்தின் ஒரு பகுதியாக இருக்கவேண்டும்.

என திருத்தந்தை தமது செய்தியில் கூறியுள்ளார்.

### யூதாஸாக நடித்தவரின் பரிதாப மரணம்

உயிர்ப்பு விழாவையொட்டி இத்தாலியக் கிராமமொன்றில் நடிக்கப்பட்ட இயேசுநாதர் பற்றிய நாடகத்தில் யூதாஸாக நடித்த இளைஞன் தவறுதலாக கழுத்தில் கயிறு இறுக்கி பரிதாப மரணமடைந்துள்ளார்.

ரெனாட்டோ டி பவுலோ என்ற இந்த இளைஞர் இயேசுவைக் காட்டிக் கொடுத்தபின் தூக்கிட்டுத் தற்கொலை செய்த காட்சியில் நடிக்கும்போது கயிறு அவரது கழுத்தை நெரித்ததால் துடி துடித்துச் செத்தார்.

இதை அறியாத பார்வையாளர்கள் அவர் மிகத் தத்ரூபமாக நடிப்பதை எண்ணினர்.

உண்மை தெரியவந்தபோது அக்கிராமமே சோகத்தில் ஆழ்ந்தது.

### மானிப்பாய் மறையாசிரியர் யாத்திரை

வசந்தம் வீசும் இவ் யூபிலி ஆண்டினில் புனித பலன் பெறுவதற்காக மானிப்பாய் மறையாசிரியர் ஒன்றியம் பங்குத் தந்தையின் ஒத்துழைப்புடன் கடந்த மாதம் 17.03.200 வெள்ளி காலை 8 மணியளவில் யாத்திரைக்கான ஆரம்ப வழிபாட்டுடன் அந்தோனியார் ஆலயத்திலிருந்து ஆரம்பமாகியது. செபமாலை பாடல்கள், செபங்கள் என்பன வேளையில் இடம்பெற்றன.

அச்சுவேலி புனித சூசையப்பர் ஆலயம், அமலி வனத்திலுள்ள செபமாலை தாசர் கன்னியர் மடம், கார்மேல் சபை கன்னியர் பாடசாலை என்பனவற்றை தரிசித்து பருத்தித்துறை புனித லூர்து அன்னை ஆலயத்திற்குச் சென்று, தியானங்கள், செபமாலைகள், "தபக்காலம்" பற்றி மறையாசிரியர் திருவாளர் ஜெயசீலனால் கருத்துரையும் வ்ழங்கப்பட்டது.

இம்மாத ஒன்றியக் கூட்டமும் சிலுவைப் பாதையும், திருப்பலியும் இடம்பெற்றது. மாலை 6 மணியளவில் யாத்திரை நிறைவுற்றது.

20ஆம் நூற்றாண்டின் ஆன்மீக நட்சத்திரம்

**"பணி அரும்புகள்" நடாத்திய மேற்படி போட்டி முடிவுகள் பாதுகாவலன் அடுத்த இதழில் வெளியாகும்.**

## முன்னாள் அனுராதபுர ஆயர் மரணம்



அனுராதபுர மறைமாவட்டத்தின் முதல் ஆயரான ஹென்றி குணவர்த்தன அ.ம.தி. ஆண்டகை அண்மையில் காலமானார். ஏப்ரல் 28ஆம் திகதி காலையில் மட்டக்குளியவில் உள்ள மஸனெட் இல்லத்தில் இரங்கற் திருப்பலி நிறைவேற்றப்பட்ட பின் இவரது பூதவுடல் அனுராதபுரத்திற்கு எடுத்துச் செல்லப்பட்டு ஏப்ரல் மாதம் 24ஆம் திகதி மாலை 3மணிக்கு அடக்கம் செய்யப்பட்டது.

*பாதுகாவலனில் பிரசுரமாகும் தரமான செய்திகளுக்கு தகுந்த சன்மானம் வழங் கப்படும். மிகுதி விபரம் அடுத்த இதழில் வெளியாகும்.*

(ஆசிரியர்)

## குருத்துவ திருநிலைப்படுத்தல்

# ஜஸ்ரின் செளகான் தி.ந.ச.



சில்லாலை புனித கதிரைமாதா ஆலயத்தைச் சேர்ந்த மேரி ஜோசவ் மேரி ஜோசப்பின் தம்பதிகளின் ஆறாவது புதல்வனும் திவ்விய நற்கருனை சபையைச் சார்ந்தவருமான அருட்சகோதரன் ஜஸ்ரின் செளகான் மேரி ஜோசப் அவர்கள் 27-04-2000 அன்று வியாழக்கிழமை காலை 9.30 மனிக்கு யாழ் ஆயர் பேரருள்திரு தோமஸ் செளந்தர நாயகம் ஆண்டகை அவர்களால் யாழ். பேராலயத்தில் திருநிலைப்படுத்தப்பட்டார்.

22-10-1971ல் பிறந்த இவர் தனது ஆரம்பக் கல்வியை சில்லாலை றோமன் கத்தோலிக்க தமிழ் கலவன் பாடசாலையிலும் உயர் கல்வியை இளவாலை புனித கென்றியரசர் கல்லூரியிலும் கற்றார்.

புனித பீற்றர் யூலியன் எயிமார்ட் 1856ல் ஸ்த்தாபித்த திவ்ய நற்கருனை சபையில் தன்னை இனைத்துக் கொண்ட இவர் தனது ஆரம்ப குருத்தவ பயிற்சியை கொழும்பத்துறை புனித வளனார் அமலமரித் தியாகிகள் குருமடத்திலும் கொழும்பு புனித பீற்றர் யூலியன் நிலையத்திலும் பெற்றார். தனது தியானப் பயிற்சியை கல்கசேன கொழும்பிலும், மெய்யியல், இறையியல் கலட்வியை அம்பிட்டியா தேசிய குருமடத்திலும் பெற்றார். பிலிப்பைன்ஸிலும் நித்திய வாக்குத்தத்த பயிற்சியைப் பெற்று, 13-11-1999ல் கொழும்பு புனித பிலிப்பு நேரியார் ஆலயத்தில் தியாக்கோனாக திருநிலைப்படுத்தப்பட்டார். நுவரேலியா புனித சவேரியார் ஆலயம், மாத்தளை புனித தோமையார் ஆலயம், கொழும்பு புனித பிலிப்பு நேரியார் ஆலயம் ஆகிய இடங்களில் தியாக்கோனாகப் பணியாற்றினார்.

# "அன்பிய வாழ்வினூடாக பங்கேற்கும் திருச்சபைக் குழுமமாக மாற்றமடைவோம்"

இளவாலை மறைக்கோட்டத்தைச் சார்ந்த பங்குகளின் பிரதிகளுக்கான 'அன்பிய வாழ்வுக் கருத்தரங்கு' 10.03.2000 முதல் 12.03.2000 வரை பண்டத்தரிப்பு தியான இல்லத்தில் நடைபெற்றபோதே, மேற்படி கருத்து வலியுறுத்தப்பட்டது. 10.03.2000 அன்று மாலை 6.00மணியளவில் இக் கருத்தரங்கை ஆரம்பித்து வைத்த இளவாலை மற்றைக்கோட்ட முதல்வர் அருள்தந்தை யஸ்ரின் ஞானப்பிரகாசம் அவர்கள் உரையாற்றுகையில் பிலிப்பியர்:4:8-9 இறைவார்த்தைப் பகுதியை ஆதாரம் காட்டி "உண்மை, நீதி, தூய்மை, நேர்மை, கண்ணியம் என்னும் நற்பண்புகளுடைய திருச்சபைக் குழுமங்களை நாம் உருவாக்க வேண்டுமெனில் அன்பிய வாழ்வினை எம் தலத் திருச்சபைகளில் கட்டியெழுப்புவதன் மூலமே அது முடியும்" எனக் குறிப்பிட்டார்.

இம் மூன்று நாள் கருத்தரங்கின் மூலம் அன்பிய வாழ்வை எவ்வாறு வாழப் பயில்வது, அன்பியக் குழுமங்கள் வழியாக பங்கேற்கும் திருச்சபையைக் கட்டியெழுப்ப முடியும்? என்பதனை பற்றிப் பல கருத்துரைகள், வீடியோ படக்காட்சிகள் ஊடாக விளக்கமளிக்கப்பட்டதுடன், குழு அமர்வுகள், ஆய்வுகள் மூலம் ஆதித்திருச்சபையில் விளங்கிய அன்புறவுச் சமூகத்தினை எவ்வாறு தற்கால நவீன உலகியல் போக்குகள் மத்தியில் வாழும் கிறிஸ்தவ குழுமங்களிடையே வளர்க்க முடியும் எனவும் ஆராயப்பட்டது. (இம் மூன்று நாட்களும் வெறும் கருத்துரைகளைப் பெற்றது போல் அமையாது, உண்மையான இறை அனுபவத்தை பெற்ற வாழ்வாக அமைந்ததென்பது பங்குபற்றியோரின் ஏகோபித்த கருத்தாகும். இஃது கருத்தரங்கின் பெருவெற்றி எனக் குறிப்பிடலாம்.)

இளவாலை மறைக்கோட்ட அன்பிய ஊக்குவிப்பாளர்களின் இயக்குநரான அருள்தந்தை அன்ரனிபாலா அவர்களால் ஒழுங்குசெய்யப்பட்ட இக்கருத்தரங்கிற்குக் கருத்துரைகள் வழங்க யாழ். மறைமாவட்ட அன்பிய ஊக்குவிப்பாளர்களின் இயக்குனரான அருள்திரு யேசுரட்ணம் அவர்களும், அருள்திரு ரவிச்சந்திரன், அருள்திரு சாள்ஸ்கொலின், அருள்திரு லோறன்ஸ் ஆகியோரும் வருகை தந்திருந்தனர். (இவர்களது கருத்துரைகள், செயற்றிட்டங்கள் யாவும் பங்குபற்றியோர் மத்தியில் அன்பிய உருவாக்கம் பற்றிய தெளிவான மனப்பாங்கினை ஏற்படுத்தியுள்ளது.

இக்கருத்தரங்கிற்கு இளவாலை மறைக்கோட்டத்தின் பெரும்பாலான பங்குகளிலிருந்து ஐம்பத்தைந்து பிரதிநிதிகளும், அருள்சகோதரிகளும், பங்குத் தந்தையர்களும், கலந்துகொண்டு சிறப்பித்தமை குறிப்பிடத்தக்கது.

S.M. வுலோறன்ஸ்
இளவாலை

# மனித வாழ்வின் நிறைவிற்கு அடித்தளம்?

இளவாலைப் பங்கில் நடைபெற்ற மகாஞான ஒடுக்க நிகழ்வுகளில் இடம்பெற்ற, உளவாற்றுப்படுத்தல் கருத்தரங்கிலேயே மேற்கூறப்பட்டுள்ள கருத்துத் தெரிவிக்கப் பட்டது. மேலும் இக்கருத்தரங்கில் இன்றைய தனிமனிதனது மகிழ்ச்சிகரமான வாழ்விற்குத் தடையாக விளங்கும் போர்ச் சூழல், பொருளாதார ஏற்றத் தாழ்வு, கல்வியல் பாகுபாடு, நவீனத்துவ மோகம், சமூகப் பிரிவினை, போன்ற பல காரணிகள் பற்றியும் ஆராயப்பட்டது.

உள அமைதியைப் பாதிக்கும் காரணிகளிலிருந்து எவ்வாறு ஒரு மனிதன் தன்னை விடுவித்து ஆரோக்கியமான வாழ்வைக் கட்டியெழுப்ப முடியும் என்பது பற்றிக் கலந்துரையாடப்பட்டது. மனிதன் தான் யார் என்பதை இனங் காண்பதுடன், வாழ்வில் சவால்களை எதிர்கொண்டு எவ்வாறு மகிழ்வாக வாழமுடியும் எனவும் இன்று சமூகத்தில் நிலவும் பல நோய்களுக்கு மனிதன் அடிமையாவதற்கு, அவனது மன அமைதியற்ற நிலையும் ஓர் காரணமாகும் எனவும் மனிதன் மகிழ்வாக வாழ உடல், உள, ஆன்மீக, சமூக வளர்ச்சியில் உயர்ச்சி பெறவேண்டும். இதற்கு இறை வார்த்தையை ஆதாரமாகக் கொண்டு ஆன்மீக நெறிப்படுத்தலில் வாழ்வது அவசியமாகும் எனவும் கூறப்பட்டது.

இக் கருத்தரங்கினை உளவியல் நிபுணர் அருள்திரு S.டேமியன் (அ.ம.தி) அவர்களும், அ.ம.தி. சபைக் குருமட அதிபர் அருள்திரு ம.போல் நட்சத்திரம் அவர்களும் இணைந்து நடாத்திச் சிறப்பித்தனர்.

இ.கில்லறிசயூறன்
இளவாலை.

இப்பத்திரிகை யாழ். பிரதான வீதி, 360 இலக்கத்தில் உள்ள புனித வளன் கத்தோலிக்க அச்சகத்தில் அதன் முகாமையாளரால் ஓவ்செற் முறையில் 2000ஆம் ஆண்டு அச்சிட்டு வெளியிடப்பட்டுள்ளது.- P.197

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org